17-2-1993



ஆண்டு பலவாக அடங்கி,
குனிந்த தலை
மீண்டும் நிமிர்த்தாது இருக்கின்றாய்.
அந்தோ பார்
காலடிகள் பட்டுக் கசங்குகிறது புல்.
நாங்கள்
நாலடிகள் எடுத்து நடப்பதற்குள்,
முன்போல,
மீண்டும் நிமிர்ந்து முறைப்போடு நிற்கிறது.
யானையைக் கூட அடக்கினாள்,
''அரியாத்தை''
யாரிவள்?
உன் பூட்டி.
பூனைக்கண்ணோடு புகுந்த அந்நியனை,
ஓட விரட்டினான் ஒருவன்.
யாரிவன்?
உன் பூட்டன்.
வேண்டும் உனக்கிந்த வீரம்
தமிழனே!
கூண்டைத் திறந்து குதித்து வெளியேவா.

# நாம்
# அணிவகுத்துள்ளோம்

நாம் அணிவகுத்துள்ளோம்
நாம் தமிழீழப் படைவீரர்கள்
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த நாட்டை மீட்க,

எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்.
அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை.
புயலெனச்சீறி
இழந்த நாட்டை மீட்க,

நாம் அணிவகுத்துள்ளோம்
நாம் தமிழீழப் படைவீரர்கள்

எமது படையணி கடக்கவேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்.
ஆனால்...
அதைத் தாங்கக்கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு.
எதிரியின் ஆயுதபலமோ பலம் பொருந்தியது.
எமது ஆத்மபலமோ அதைவிட வலிமை வாய்ந்தது.
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்......
ஆனால்......



எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்.

நாம் அணிவகுத்துள்ளோம்
நாம் தமிழீழப் படைவீரர்கள்

நாம் செல்லும் இடமெல்லாம்
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்
மக்களிடமுள்ள
பிரதேசம், சாதி மதமென்னும்
பேய்களும் அலறி ஓடுகின்றன

எமது படையணி விரைகிறது
எமது தேசத்தை மீட்க

நாம் செல்லும் இடமெல்லாம்
காடுகள் களனிகளாகின்றன
வெட்டிப் பேச்சுப் பேசுவோர்
மிரண்டோடுகின்றனர்.
உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது
ஏழை முகங்களில்
புன்னகை உதயமாகிறது

நாம் அணிவகுத்துள்ளோம்
நாம் தமிழீழப் படைவீரர்கள்

(1981 ம் ஆண்டு தலைவரால் எழுதப்பட்ட இந்தக் கவிதை "தமிழீழம்" இதழில் வெளிவந்தது)



தமிழீழ தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

# புதுநிலம்

## மீண்டும் ஒரு காலை

கொடிய வாகனங்களின்
கோரப்பற்கள்
கறுப்பு நிலத்தில்
சல்லடை போட்டன

குவலயத்தின் சரிவில்
மீண்டும் ஓர்
குருதியின் கொப்பளிப்பு

சின்னப்புக் கிழவனின்
பெட்டிக் கடை மட்டும்
தனித்து அங்கு
சரிந்து கிடந்தது

கிணற்று வெடிப்பில்
விளைந்த ஆலும்
இலையை உதிர்த்து
மடிந்து செத்தது

தரிசில் கிடந்த
கோரையின் முதுகிலும்
கோரப்பதிவின்
நினைவுத் தடங்கள்

குலை வாழைகள்
குப்புறக் கிடந்தன.
முளைவிட்ட குட்டிகள்
முனைப்போடு நின்றன.

சிதைந்த மதிலில்
சிறுதுண்டு கல்லில்
சின்னப் போராளியின்
சிரித்த முகம் தெரிந்தது.

சப்தங்கள் அடங்கிய
ஒரு காலை
மீண்டும்
மெல்லப் புலர்ந்தது

□ பிரேமினி சுந்தரலிங்கம்

## மாவீரர்

மாவீரர் என்றால் மகத்தான சாதனையைத்
தாமாகச் செய்பவர்கள் — தமிழைக்
காவாந்து பண்ணி கண் போல காப்பதற்காய் — உயிரை
தா எனும் முன்பே தருபவர்கள் — கொடிய
சாவையே நல்ல சர்க்கரையாகத் தின்னும்
பேராளர் — பெருமையாய் மண்ணைக் காக்கும்
சீராளர் — இப்பேர்ப்பட்ட
சிறந்தோரையெல்லாம் நாங்கள்
நாவாலே சொல்லி நல்ல தமிழ் கோர்த்தெடுத்து
பாவாலே யெல்லாம் பாடிவிடமுடியாது — உயர்
தேவாலயத்தில் வைக்கும் தேவனைப் போலே — மனப்
பூவாலயத்தில் வைத்துப் பூசிப்போம் — புனிதமாய்
நாமாக ஒவ்வோர் நாளும் அர்ச்சிப்போம்

□ ஸ்ரீ பிரசாந்தன்

# தவம்

நா. யோகேந்திரநாதன்



சோளகம் பெயர்ந்து, உப்பு மண்ணை அள்ளி வீசி நீண்ட கறுத்தப்பனைகளை வெள்ளாடை போர்த்தி விளையாடிக் கொண்டிருந்த காலத்தில் தான் நான் அந்தக் கிராமத்திற்கு நியமனமாகி வந்தேன். சிறிது கவனம் பிசகினாலும் காலைப்பிளந்து விடத் தயாரான கற்களால் நிரம்பிய அந்த வீதியும்; அதில் கீறப்பட்ட இரு சமாந்தரக்கோடுகளாகக் காணும் வண்டில் தடங்களும். வேலியிலிருந்து வளர்ந்து, வளைந்து அந்த நீண்டதெருவுக்குக் குடைபிடிக்கும் பூவரசம் கதியால்களும் முற்றிலும் நகர்ப்புறச் சூழ்நிலையிலேயே பிறந்து வளர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தின் விரட்டலின் கொடுமை தாங்காது ஆசிரியக்கவசம் பூண்டு அந்தக் கிராமத்திற்கு வந்த எனக்கு வித்தியாசமான அனுபவங்கள் தானென்றாலும், அவற்றிலும் ஒரு இனிமை இழையோடுவதை என்னால் உணர முடிந்தது.

அந்தத் தெருவும், தார் வீதியும் சந்திக்கும் இடத்தின் தென்கிழக்கு மூலையில் தான் சங்ககாலத்தை நினைப்பூட்டும் அந்தச் சந்தை அமைந்திருந்தது. உப்பு வெளியின் தொலைதூரப்பனைகளின் பின்னால் சூரியன் இறங்கி இருளுக்கு வழி விடத் தொடங்கும் நேரத்தில் தான் குப்பி விளக்குகளின் கோலாகலமான அலங்கரிப்பில் அந்தச் சந்தை ஆரம்பமாகும்.

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

"கூரையில தட்டிப் பிறந்த நான் ஒரு வீரமான வாழ்வைத் தான் வாழுறன். நான் கலியாணம் கட்டுறதும் ஒரு வீரனைத் தான்"

மரக்கறி வியாபாரத்திலிருந்து இறால், சள்ளை என அன்றாடத் தேவைகளுக்கான விற்பனைகள் வரை சுற்றியுள்ள கிராமங்களின் தேவைகளை அச்சந்தை பூர்த்தி செய்யத் தவறுவதில்லை. றாத்தல், கிலோ என உலகம் எப்படியெல்லாமோ மாற்றங்களினூடாக நகர்ந்து கொண்டிருந்தாலும் இங்கு எல்லாம் கூறுவிலை தான்.

அந்தச் சந்தைக்குள் இறங்கியதும் கண்படும்படியான ஒரு இடத்தில் அமர்ந்து, மரக்கறிக் கடகத்தின் மேல் பனை ஈர்க்கினால் பின்னப்பட்ட ஒரு அகன்ற வட்டப் பெட்டியில் கூறு கூறாக மரக்கறிகளை நிரப்பிச் சுறுசுறுப்பாக வியாபாரம் செய்து கொண்டிருக்கும் சின்னாச்சி அக்கையின் வாடிக்கையாளனாக நான் மாறியதற்குப் பிரத்தியேகமான காரணம் எதுவும் இருப்பதாக எனக்கு நினைவில்லை. ஆனால் எந்நேரமும் வெற்றிலையினால் சிவந்திருக்கும் அவரின் அதரங்களும், சிரிப்பும், கடுமையும் மின் வெட்டும் வேகத்தில் தோன்றி மறையும் முகமும், குறுக்குக்கட்டிலிருக்கும் கொட்டப்பெட்டியை எடுத்துக் குலுக்கி கண்ணால் பாராமலே தேவையான சில்லறையைக் கையில் எடுக்கும் லாவகமும், அந்த நீண்ட விரல்கள் வியாபாரத்தின் போது செயல்படும் வேகமும் எனக்கு அவர் மேல ஒரு ஈர்ப்பை உண்டாக்கவில்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் அள்ளி முடிந்திருந்த அவரது கூந்தலில் ஒரு நரைமயிர் கூட இல்லாத போதும், அவருக்கு வயது நாற்பத்தியெட்டு என்பதை அறிந்த போது நான் ஆச்சரியப்பட்டதை விட, அவர் இன்னும் திருமணமே செய்யாது வாழ்வதும், தானே உழைத்துத் தானே உண்ணும் வாழ்வு தான் அவருடையது என்பதையும் என்னால் நம்பவேமுடியவில்லை.

அன்று மாலை நான் சந்தைக்குப் போன போது சின்னாச்சி அக்கையின் இடம் வெறுமையாயிருந்தது எனக்குப் பெரும் ஏமாற்றத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியது. நான் இந்த ஊருக்கு வந்ததிலிருந்து சந்தை நேரத்தில் அந்த இடம் காலியாய் இருந்ததேயில்லை.

சின்னாச்சி அக்கை சந்தைக்கு வராவிட்டால் கூட அந்த இடத்தில் அமரும் எண்ணம் யாருக்குமே வர வாய்ப்பில்லை. ஒரு நாள் தேங்காய் வியாபாரி மாணிக்கம் தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ தன் மூட்டைகளைச் சின்னாச்சி அக்கையின் இடத்தில் அடுக்கி விட்டான். சின்னாச்சியின் கோபத்தின் அளவு அவ்வளவு உச்சத்தில் இருந்தமைக்குத் தலையிலிருந்த கடகத்தின் சுமையோ, அல்லது மாணிக்கத்தின் முறையற்ற செய்கையோ என்பதை நான் ஊகிக்க முன்னமே பாய்ந்து வெடித்த வார்த்தைகள் என்னையே பயங்கொள்ள வைத்து விட்டன.

''டேய், மாணிக்கம்! உனக்குத் தேங்காய்ச் சாக்கு வைக்க வேறை இடம் கிடைக்கயில்லையே!''

மாணிக்கத்தின் இளம் இரத்தம் கொஞ்சம் சூடானபதிலைத் தான் கொடுத்தது, ''என்னக்கா! உனக்கிந்த இடம் என்ன சீதனமே?''

''என்னடா சொன்னனீ?'' வழமையாக இன்னொருவர் உதவியுடன் இறக்கப்படும் மரக்கறிக் கடகத்தை தனியாகவே 'தொப்' என்று இறக்கி வைத்த சின்னாச்சி அக்கையின் வார்த்தைகள் மாணிக்கத்தை

வண்ணார்பண்ணை ...
மாநகர சபை
யாழ்ப்பாணம்



நிலைகுலைய வைத்தன. ''சீதனம் தரப்போறீயோ சீதனம்...... எனக் கேன்ரா சீதனம்? ஆரடா இந்த ஊரிலை ஒரு சீரான ஆம்பிளை இருக் கிறான்? இருந்தால் அவனைக் கலியா ணம் கட்டியிருப்பனடா.... டேய்...... நான் கூரையிலை தட்டிப்பிறந்த வனடா''

அதற்கு மேல் அந்த இடத்தில் நின்று மானங்கெட விரும்பாத மாணிக்கம், தேங்காய்ச்சாக்கையும் தூக்கிக் கொண்டு தூரவிலகி விட் டான். அவன் மட்டுமன்றி அதில் நின்ற எந்த ஆணுமே பதில் சொல்ல விளையாதது எனக்கு மேலும் கேள் விக்குறிகளைத் தோற்றுவிக்க ஆரம் பித்தது.

அன்றிலிருந்து. அந்தக் 'கூரை யில் தட்டிப்பிறந்த விவகாரம்' என்ன வென்று அறிய வேண்டுமென்ற உந்தல் என்னிடம் ஆரம்பித்தது. பல நாட்கள் அதைக் கேட்டு விட வேண்டு மென்ற முனைப்பு என்னுள் எழுந்த போதெல்லாம் ஏதோ ஒரு பயம் மேலெழுந்து தடுத்துக் கொண்டே யிருந்தது. அக்கிராமப்பள்ளியின் ஆசி ரியர் என்ற கௌரவம் அசம்பாவித மாக எதுவும் நடக்க விட்டு விடாது என்ற நம்பிக்கையுடன் அவரை ஒரு நாள் ஆறுதலாக இருக்கும் நேரம் பார்த்துக் கேட்டே விட்டேன்.

என் முகத்தில் தோன்றிய பயமும் வார்த்தைகளில் மிதந்த தயக்கமும் சின்னாச்சியக்கைக்குச் சிரிப்பையே வரவழைத்தது. ''அதுஅப்பிடி ஒண்டும் பெரிய விஷயமில்லை'' நான் பிறக்க யுக்கை நிண்டவை ஆரோ ஆம்பிளைப் பிள்ளை பிறந்திருக்குது எண்டு மாறிச் சொன்னதை வெளியிலை நிண்டவை கேட்டிட்டு ஓடிப்போய்க் கூரையிலை தட்டிச் சினமாம். அதை எனக்கு அப்பு அடிக்கடி சொல்லுவர்.

அவரின் புன்னகை எனக்குச் சற்றுத் தைரியத்தை ஏற்படுத்தியி ருக்க வேண்டும். ''அதுக்கும் நீங்கள் கலியாணம் கட்டாமல் இருக்கிறதுக் கும் என்ன சம்பந்தம்''

''கூரையிலை தட்டிப் பிறந்த நான் ஒரு வீரமான வாழ்வைத் தான் வாழுறன் நான் கலியாணம் கட்டுற தும் ஒரு வீரனைத்தான் எண்டு நினைச்சிருந்தன். ஆனால் என்ரை கலியாண வயசிலை ஒரு வீரனையும் சந்திக்க முடியயில்லை''

எனக்குச் சின்னாச்சியக்கை சங்க காலத்தில் புலியுடன் சண்டையிட்டுப் புலிப்பல் கொண்டு வந்தால்தான் திருமணம் என்று காதலனிடம் சூளு ரைத்த தலைவி போலத் தோன்றி னாலும், முட்டாள்தனமாக இந்த மனுஷி வாழ்க்கையைப் பாழாக்கிப் போட்டுதே என்ற அனுதாபமும் ஏற்படத்தான் செய்தது. ஆனால் உள்ளூர அவர் மேலுள்ள மதிப்பு என்னையறியாமலே என்னுள் வளர்ந்து கொண்டிருந்தது.

பொன்னம்மாக்கா சின்னாச்சியக் கைக்குப் பக்கத்து வியாபாரி. வாடிக் கையாளர்களைப் பிடிப்பதில் இருவ ருக்குமிடையே ஒரு போட்டி மனப் பான்மை இருப்பினும், தங்கள் தங்கள் வாடிக்கையாளர்கள் கேட்கும் பொருட் கள் தங்களிடம் இல்லாதபோது பக்கத்து வியாபாரியிடம் வாங்கிக் கொடுத்து வாடிக்கையாளர்களைத் திருப்தி செய்யும் ஒருவித அந்நியோன் னியமும் இருவரிடமும் இருந்தது.

மெல்ல பொன்னம்மாக்காவை அணுகினேன். ''என்ன இண்டைக்குச் சின்னாச்சியக்கையைக் காண யில்லை?''

நிமிர்ந்து பார்த்த பொன்னம்மாக்கா சிரித்துக் கொண்டே ''வாத்தியாருக்குப் சின்னாச்சியக்கையின்ரை மரக்கறி எண்டால்தான் வேகும் போலை'' என்றார். வியாபாரப் போட்டியில் மெல்லிய ஒரு கசப்பு நக்கலாக வார்த்தைகளில் வடிந்தன.

''கொக்குத் தொடுவாயிலை ஆரோ சொந்தக்காரருக்குச் சுகமில்லையெண்டு சொல்லிப் போட்டுப் போனவ!'' இன்றைக்கு இனிச் சின்னாச்சியுக்கை வரப்போவதில்லை என்பது உறுதியாகவே, நான் பொன்னம்மாக்காவிடமே மரக்கறியைவேண்டிக் கொண்டு திரும்பினேன்.

ஏறக்குறைய ஒரு மாதத்தின்பின் சின்னாச்சியக்கையைத் தெருமுனையில் கண்டதும் ஆச்சரியத்தால் திகைத்து விட்டேன். திடீரென்று ஒரு பத்து வயது குறைந்து விட்டது போன்ற ஒரு பொலிவு முகத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

''என்ன வாத்தியார் ஏங்கிப் போனியள்? இவர் தான் என்ரை புருஷன்!'' அந்த அதிரடித்தாக்குதல் என்னை நிலைகுலைய வைக்கவே சின்னாச்சியக்கையின் கழுத்தை உற்று நோக்கினேன். அதில் ஒரு மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தாலிச்சரடு மின்னியது. அருகில் நின்ற அந்த நரை பாய்ந்த, ஐம்பது வயது மதிக்கத்தக்க மனிதரும் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். சின்னாச்சியக்கை, ''பின்னேரம் வீட்டுப்பக்கம் வாருங்கோவன்'' என்று சொல்லி விட்டு, அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்ற பின்பும் ஆச்சரியத்தால் அவ்விடத்தை விட்டு அகல எனக்கு நெடுநேரம் பிடித்தது.

அந்த வயதான இளம் தம்பதிகளுக்குப் பொருத்தமான அன்பளிப்பாக எதைவாங்குவது என்று மூளையைப் போட்டுக் குழப்பியும் இறுதியில் எதையும் முடிவு செய்ய முடியாமல் வெறுங்கையோடு போன எனக்கு ''இந்தாருங்கோ வாத்தியார், இது உங்களுக்கு என்ரை கலியாண அன்பளிப்பு'', என்று சொல்லி ஒரு தேன் போத்தலைச் சின்னாச்சியக்கை தந்தார்.

''என்ன வாத்தியார், இந்த வயதிலை ஒரு கலியாணமோ எண்டு யோசிக்கிறியள் போலை?'' நான் பதில் சொல்ல முடியாது அசட்டுத்தனமாகச் சிரித்தேன்.

சின்னாச்சியக்கை சிரித்துக் கொண்டே சொன்னார், ''நான் கலியாணம் செய்ய வேண்டிய வயதிலை சண்டையும் நடக்கயில்லை. வீரர்களும் இருக்கயில்லை. நான் கண்டதெல்லாம் திருப்பிக்கையோங்காதவனைப் போட்டு அடிச்ச சண்டியன்களைத்தான்!''

இடை நிறுத்திய அவர் தன் கணவரைப் பார்த்துச் சிரித்துவிட்டு மீண்டும் தொடர்ந்தார். ''மணலாத்திலை பெரிய பெரிய ஆயுதங்களோடை வாற ஆமியை இவரைப்போலை கனபேர் அடிச்சு விரட்டிக் கொண்டிருக்கினை. கூரையிலை தட்டிப்பிறந்த எனக்குப் பொருத்தமான புருஷன் இவர் தானெண்டு முடிவு செய்தன். நாங்கள் நாளைக்கே திரும்பி அங்கை போறம்!''

சின்னாச்சியக்கையின் கூற்றை ஆமோதிப்பது போல் அவர் கணவரும் தன் முறுக்கு மீசைக் குள்ளால் ஒரு புன்னகை செய்தார்.

''சிலவேளை நானும் ஓலை வீட்டில் பிறந்து, நான் பிறக்கும் நேரம் கூரையில் தட்டியிருந்தால் எனக்கும் இவர்களைப் போல் வீரம் பிறந்திருக்குமோ?'' என்று ஒரு முறை என்னையே நான் கேட்டுக் கொள்கிறேன். ●●

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

# காலச்சுவடுகள்

*இங்கு வாழ்ந்த தமிழன் – தன்னயரா உழைப்பாலும், தன்னூக்க முயற்சியாலும் தன்னுடல் – பொருள் – ஆவி அனைத்தையும் சாறாகப் பிழிந்து, காட்டை நாடாக்கி - தானும் வாழ்ந்து, ஏனையோரையும் வாழ்வித்து, வந்தான். இது ஒரு காலச்சுவடு.*

அனு. வை. நாகராஜன்

இந்த மண்ணின் சுவடுகளுக்கு அப்பாலும், அப்பால் பதிந்த சுவடுகள் - ஆயிரமாயிரம் உண்டு. அவை அனைத்தும், கால நீரோட்டத்தில் மறைக்கப்பட்டன - மறைந்தும் போயின. ஆயினும், அச்சுவடுகளின் தடங்கள் வரலாற்றின் பதிவுகளுக்கு எங்கோ ஒரு மூலையில் - என்றோ ஒரு நாளில் - ஏதோ ஒரு விடியலுக்கு வித்தாகியே தீரும். இது வரலாறு தரும், பாடம். அது நியதியுங் கூட.

அந்த வகையில் - தென்னிலங்கையில், தமிழும் - தமிழனும் வாழ்ந்த வரலாறு ஏன் வரலாற்றின் ஒரு சுவடாக அமையக் கூடாது.

அநுராதபுரம், சிங்கள - பௌத்தத்தின் ஒரு கேந்திர பூமி. அது, சிங்கள - பௌத்த வரலாற்றின்படி - தொண்ணூறு முடிமன்னர்களின் அரசாட்சியின் சின்னமாக - அரசிருக்கையாக விளங்கியதாம்.

ஆயினும், இச்சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தின் ஊடே தமிழும், தமிழனும் எதிர்நீச்சலடித்த ஒரு வரலாறும் அங்கு இழையோடி இருப்பதை யாரும் மூடி மறைக்க முடியாது. முன்சொன்ன சிங்கள - பௌத்த வரலாற்றுக் காலம், விஜயன் என்ற ஆரியனின் வருகையோடு தொடங்குகிறது.

இவனது வருகைக்கு முன்னரும், இந்தப் பூமி திராவிடரின் சொந்த மண்ணாக இருந்திருக்கிறது. இதற்கான, தொல்லியற் சான்றுகள் மட்டுமன்றி புவியியல் - மண்ணியல் - மானுடவியல் போன்ற இன்ன பிறவும் அறிவியல் சாரச் சான்றுகளாகவும் இருக்கின்றன.

> "வயலும், குளமும் விருத்தியடைய, மக்கள் வளமுஞ் சிறுகச் சிறுக வளமும் வனப்பும் பெற்றது."

அந்நாளில்-

வளமான ஆற்றுப்படுக்கையாக விளங்கியது, மல்வத்து ஓயா என இன்று சிங்களப் பெயர்கொண்டு அழைக்கப்படும் - கடம்ப நதி அருவியாறு என்றும் அழைக்கப்பெற்ற தமிழாறு ஆகும். இதன் இரு மருங்கும் பொன்விளையுங் கழனிகளும் - நறுமணங் கமழுஞ் சோலைகளும் - தீங்கனி சொரியுந் தருக்களும் நெடி தோங்கி இருந்தன. இப்பகுதியே, அன்று இந்நாட்டின் வளமான - மக்கள் வதியும் அழகாபுரியாக விளங்கி இருக்கிறது என்பதற்கு எது வித ஐயமும் இல்லை. இத்திராவிடக் குடியிருப்பு, ஆரியராற் சூறையாடப்பட்டது. ஆரிய வழித்தோன்றல்கள் தம்மினம் பெருக்கியதோடு, இருந்த திராவிடக் கலை - கலாச்சாரப் பண்பாடுகளையுங் கபளீகரஞ் செய்து, தம்முடைமை என அவற்றை ஆக்கியுங் கொண்டன.

இது ஒரு காலச்சுவடு.

அவ்வாரியப் பரம்பலுக்கு, தமிழகம் (தென்னிந்தியா) அடிக்கடி அச்சுறுத்தல் தந்து, தன்னாட்சியை இங்கு விரித்தது. அதனால், அநுராதபுரத்துச் சிங்கள - பௌத்த அரசுகள், காலத்துக்குக் காலம் - புலப்பெயர்வு கொண்டு, தென்திசை ஏகின. கிறிஸ்துவுக்கு முன் ஆரம்பித்த, இவ்வீடாட்டம் - கி. பி. 15ம் நூற்றாண்டு வரை நீடித்தது. இதனையடுத்தும் - கி. பி 20ம் நூற்றாண்டின் முற்கூறு வரை, மேற்குலக அந்நியரின் மேலாதிக்கம் இங்கு தொடர்ந்தது.

இவ்வந்நியர் காலத்தில், அநுராதபுரம் - வளமெல்லாங் குன்றி - காடு மண்டி - நிர்மாநுஷ பிரதேசமாயிற்று. மலேரியாப் பிரதேசம் எனும் நாமமும் பூண்டு - மக்கள் குடியிருப்புக்கு உகந்ததல்ல என்றும் ஒதுக்கப்பட்டது.

இந்நிலையில்-

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக் கூறில், தொல்லியல் அகழ்வாய்வு காரணமாகவும்; வரள் பிரதேச அபிவிருத்தி காரணமாகவும்; தூர்ந்து போன குளங் குட்டைகளின் புனரமைப்பு காரணமாகவும் இங்கு மக்கள் குடியிருப்பு வளத்தைப் பெருக்க வேண்டிய தேவையேற்பட்டது. அதற்கான ஆயத்தங்கள் ஆரம்பிக்கப் பெற்றன. குறிப்பாக - அநுராதபுர நகரின் தொல்லியல் அகழ்வாய்வுகள் முனைப்புடன் இங்கு செயற்பட, 'பெல்' எனும் ஆங்கிலத் துரைமகன் தீவிரமாக முனைந்தார். அவர் முயற்சியால், இப்பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணத்துத் தமிழ்க் குடிகள் பல இங்கு மீளக் குடியமர்த்தப் பெற்றன.

வயலும் குளமும் விருத்தியடைய, மக்கள் வளமுஞ் சிறுகச் சிறுக வளமும் வனப்பும் பெற்றது. இதே காலத்தில் - வடபுலத்துக் கல்வி வளமும் - தொழில் நுட்பமும் - வணிகத் திறனும் மிக்க தமிழ்க் குடிகள், இங்கு நிரந்தரமாகக் குடியமர்ந்து, நகரின் செல்வத்தைப் பெருக்கினர். மேலும், இவர்கள் தமக்கெனத் தனித்தனித் தமிழ்க் குடியிருப்புகளையும் நகரில் ஏற்படுத்தி வாழ்ந்தனர். அந்த வகையில், மாவடி - ஐந்தேக்கர் - நாலேக்கர் - பெரிய சேனை - எல்லைக்கட்டு - ஒட்டுப்பள்ளம் - யாழ்ப்பாணச் சந்தி போன்ற சிறப்பான தமிழ்க் குடியிருப்புகள் செழித்தோங்கி விளங்கின. அந்நாளில், கச்சேரிச் செயலகமென்ன - நீதித் தலமென்ன - பள்ளித்தலமென்ன - வர்த்தகத் தலமென்ன - பயிர்செய் நிலமென்ன - சினிமாப் படமாளிகை போன்ற கேளிக்கைத் தலமென்ன, யாவும் 'தமிழர் மயமாக' - உடைமையாகவே இருந்தன.

அன்று, இங்கு வாழ்ந்த தமிழன் - தன்னயரா உழைப்பாலும், தன்னூக்க முயற்

சியாலும் தன்னுடல் - பொருள் - ஆவி அனைத்துதையும் சாறாகப் பிழிந்து, காட்டை நாடாக்கி - தானும் வாழ்ந்து, ஏனையோரையும் வாழ்வித்து வந்தான். இது ஒரு காலச்சுவடு!

இதனையடுத்து - அரச இயந்திரம் கைமாறியது. சிங்கள - பௌத்த அரசு மீண்டும் தலையெடுத்தது. அதனூடே, இன-மத வாதமும், அரச பின்னணியில் - மறைமுகமாகவும், நேரடியாகவுங் கிளர்ந்தது.

அந்நிலையில்-

'நகர்ப் புனரமைப்பு' என்ற போர்வையில் - அநுராதபுரம் நகர், 'புனித நகர்' எனப் பிரகடனப்படுத்தப் பெற்றது. அதற்காக, அந்நகரின் புனர் நிருமாணத் திட்டம் என்ற ஒன்றை - பாராளுமன்ற நிறைவேற்றுத் திட்டமாகவும் வெளிப்படுத்தப் பட்டது. இதன் பிதாமகனாக - அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர், திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா முன்னின்று செயற்பட்டார். இத்திட்டத்துக்குப் பின்னணியாக - அவரது இனவாதக் கொள்கையின் இனவொழிப்புத் திட்டங் கரந்திருந்தது. இதன் மூலம் - 'தேசிய அரசு' என்ற முகமூடி தரித்திருந்த அன்றைய சிங்கள - அரசு, அநுராதபுர நகரத்துத் தமிழரின் மேன்மையை அழித்தொழிக்க அப்பொழுதே திட்டமிட்டுக் கொண்டது. இதற்கோர் எடுத்துக்காட்டை மட்டும் இங்கு சுட்டலாம். அந்நாளில் (1950களில்) அநுராதபுரநகரின் ஊராட்சி மன்ற உறுப்பினர்களில், ஓரிருவரைத்தவிர, மன்றத் தலைவர் திரு. ஆர். வி. கந்தசாமி உட்பட பெரும்பான்மை உறுப்பினர்கள் அனைவரும் தமிழர்களாகவே இருந்தனர். இத்தலைவருடைய காலத்தில்தான் - மேற்குறித்த 'புதிய நகர்த் திட்டமும்' வந்தது. அப்பொழுது - காரணம் இல்லாத ஒரு காரணத்தை வைத்து, இம்மன்றத்தைக் கலைத்து, தமது திட்டத்தை நிறைவேற்ற - திரைமறைவில் அரசு செயற்பட்டமையையும் இங்கு நினைவு கூர்வது நல்லது.

*"எல்லாளன் முதல், தமிழ் வீர மறவர் பலர் வாழ்ந்த அப்பூமி, இன்று சிங்கள - பௌத்த இன வாதிகளின் கைக்கு இடம் மாறி விட்டது."*

மேற்குறித்த திட்டங் காரணமாக - இந்நகரில் வாழ்ந்த தமிழரின் பாரம்பரியக் காணிகளும், உடைமைகளும் சுவீகரிக்கப்பட்டன. நகரைச் சூழவுள்ள தமிழரின் வயல்கள், தோட்டங்களுக்கு இடையே பொதுப் பாதைகளும் - ஒழுங்கைகளும் - அரச - பௌத்த கட்டிடங்களும் அமைக்கப்பட்டன. இக் கைங்கரியத்தை இரவோடு இரவாகச் செய்த பெருமை - ஒரு காலத்தில் ஸ்ரீ. ல. சு. கட்சிக்குப் பின் நின்றவரும்; பிறிதொரு காலத்தில் - ஐ. தே. க. அரசில் அமைச்சராக இருந்தவரும்; தற்பொழுது - கண்டி தலதாமாளிகை 'தியாவன நிலமே'யாக இருப்பவருமான திரு. நிசங்க விஜயரத்தினாவையே சாரும். (இவர் 50-60களில் அநுராதபுரம் அரச அதிபராகவும்; யாழ். சத்தியாகிரக காலத்தில் விசேட அரச அதிபராகவும் இருந்தவர்.) நகரையடுத்து - வயல் நிலங்களாகவும், பொன்விளையும் பூமிகளாகவும் இருந்த பழம்பெரும் தமிழ்க் கிராமங்களான பொன்னாவரங்குளம் - குமிச்சன்குளம் - நுவரைக்குளம் போன்ற பிரதேசங்களைத் தமிழரிடமிருந்து சுவீகரித்து - அவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் அநுராதபுரம் புதிய நகர் நிருமாணம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டங் காரணமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் எதிர்ப்புகள் தெரிவித்து - இடம் பெயராது இருந்தனர். இருந்தும், 1957 திசம்பரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாகவும்; வற்புறுத்தி வெளியேற்றப்பட்டதன் காரணமாகவும் அம்மக்களிற் பலர் பழைய நகரில் இருந்து, பேரிழப்புக்குப் பின்னர் புதிய நகருக்கு இடம் பெயர்ந்தனர். இதனையடுத்து - 1958ல் ஏற்பட்ட முதலாவது இனக் கலவரங் காரண

மாகவும் நகரில் நீண்ட காலம் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த தமிழர்கள், இறந்தவர் போக எஞ்சியோர் வலுக்கட்டாயமாக 'ஊத்தை லொறி'களில் ஏற்பட்டு வவுனியாவுக்கு அப்பால், ஏற்றி இறக்கப்பட்டனர் இருந்தும் - 1960 க்குப் பின், மீண்டும் தமிழர் சிலர் அங்கு சென்று, இழந்தவை போக - எஞ்சிய உடைமைகளுடன் வாழத் தலைப்பட்டனர். புதிய நகரில் - கஞ்சிக்குப் பயறு போட்டது.' போல், சிங்கனப் பெரும்பான்மைக் குடிகளுக்குள் பெற்ற கால், அரை ஏக்கர்க் காணிகளில் (அரச குத்தகை - *Lease* - காணிகள்) புனர்வாழ்வு பெற அத்தமிழர் முயன்றனர்.

இது ஒரு காலச்சுவடு!

இதன் பின்னரும் - (1956க்குப் பின்) அத் தமிழரின் வாழ்வு ஈடாட்டமுற்று, 1977ல் முற்றாக அழிக்கப்பட்டது. 1977ன் இனக் கலவரத்தின் போது - மீண்டும் தலையெடுக்க முனைந்த அநுராதபுரத் தமிழர் பலர், காயுங் கனியுமாய் மட்டுமன்றி, பூவும் பிஞ்சுமாய் படுகொலை செய்யப்பட்டனர். அவர்தம் வீடுகள் - உடைமைகள் தீயிடப்பட்டன. பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டன. பாதுகாப்பு தருவதாக இராணுவமுகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்ட ஆலயக் குருக்கள் - தமிழ்ச் சட்டத்தரணிகள் போன்ற அப்பாவித் தமிழர்கள் பலர் சுட்டுத் தள்ளப்பட்டனர். இதன் பின்பும், தப்பியொட்டி அங்கு குடியிருந்த தமிழர் 1985ல் மீண்டும் படுகொலைகளுக்கு ஆளாகி உயிரிழந்து போயினர்.

இப்பொழுது-

இங்கு, தமிழ்ச் சிறாரின் கல்வி - கலை - கலாசாரப் பண்பாடுகளை வளர்த்த ஒரேயொரு நிறுவனமாக விளங்கிய, அநு/விவேகானந்த மகா வித்தியாலயம் முஸ்லிம்களின் உடைமையாகி விட்டது. இந்துக்களின் பேராலயமான ஸ்ரீ கதிரேசன் ஆலயம், சிதைக்கப்பட்டுத் தொல்பொருட் சின்னமாகப் பற்றையும் புதரும் மூடிக்கிடக்கிறது. பண்டு தொட்டு ஆண்டு அநுபவித்த தமிழரின் வயல்கள் - தோட்டங்கள் - சுடைகள் - கட்டிடங்கள் சிங்களவரினதும் முஸ்லிம்களினதும் உடைமைகளாகி விட்டன. அத்தோடு பரம்பரை பரம்பரையாகப் பேணிக் காத்த அநுராதபுரத் தமிழரின் தனித்துவம் யாவும், கடந்த நான்கு தசாப்தங்களுக்குள் நன்கு திட்டமிட்டு அழிக்கப்பட்டு — அவர்தம் வாழ்வும் வளமும் அநாமதேயங்களாக்கப்பட்டு விட்டன.

எல்லாளன் முதல், தமிழ் வீரமறவர் பலர் வாழ்ந்த அப்பூமி, இன்று சிங்கள — பௌத்த இனவாதிகளின் கைக்கு இடம் மாறிவிட்டது. ஓ


## வெளிச்சம்
கலை இலக்கிய சமூக இதழ்

இதழ் அமைப்பு:-
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

உருவாக்கம்:-
ஆசிரியர் குழு

முகப்போவியம்:-
தயா

அச்சு:-
ம. மரியதாஸ்

வெளியீடு
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்.

# இருப்பு



□ கல்வயல் வே. குமாரசாமி

ஆலமர நீழல்
அசைபோடும் மாடுகள்
தம்மேலே இருக்கும் எருத்து ஈயை
வாலினால் வீசிக் கலைக்கும்
வேரிடுக்கில்
சூலத்தில் பூசி இருக்கும் திருநீறு சந்தனத்தின் வாசத்தை
மூக்கு வடிவாய் முகர்ந்தெடுக்க
வீசிவரும் காற்று விநியோகம் செய்வதனால்
அந்த மணத்தால் நினைப்பில் அதிர்வெழும்பும்.
முந்தும் பய உணர்வு
முன் அவ் வைரவரால்
சொன்ன கதைகள் நிழலாடும் நெஞ்செல்லாம்
சின்னையர அம்மான் சிறுநீர்கழிக்கப்போய்ப்
பின்னால் வளவுள் இறந்து கிடந்ததுவும்
அன்னமக்கா மாலை அந்த ஆலடியால்
வந்திரவு ரத்தமாய்க் கக்க,
பலிகொடுத்த
சேவல், கிடாய் இறைச்சி பூசனி பற்றியெலாம்
நாவலடி வளவு நல்லையர் மாநிழலில்
சொன்னதெலாங் கனவில் கண்டு
துடித்தெழும்பி
சன்னி எனச் சொல்லிச் சரவணையார் மந்திரித்து
'நூல் முடிந்து கட்டி,
முடகசில் சழிப்பு' வைத்தும்
ஆலடிக்கு நேர்ந்தே அனைத்தும் சுகமாச்சாம்

அந்தக் கதைகள் அனைத்தும் நிழலாடும்
முந்தும் பழ உணர்வு முன்
அவ் வைரவர் ஆல் விழுது
தலைப்பு அறுத்த பின்னும்
முளைத்த வளுக்கள் கிளை எறிந்து
மாட்டுவால் போற்பல குஞ்சங்கள் தூங்கும்
குழைப்பாரக் கொப்புகளைக்
கொஞ்சம் தொடைபோற் பெருத்த விழுது
சரை ஊடாக
மண்ணில் உரமாக ஊன்றிமதக்காடாய்
காடாய் வளர்ந்து செழிக்க வரம் கொடுக்கும்.
ஆலங்கிளிகள் அகராதி காணாத
மூல மொழி பயிலும்
மூக்கு மஞ்சள் நாகணவாய் தங்களுக்குள்
ஏதோ நிறையக் கதைத்தபடி.
வானம் நிமிர்ந்த பகலோன் வளர்கொதிப்பால்
கானல் அலை பாயும்,
கண்கரியும்
உச்சியிலே, வல்லூறு வட்டமிடும்
வாடித் தலை சாய்க்கும் புல்லும்
அடிவேர் சருக்கும் கடும் வெக்கை
கல்லாய் எதிரியைக் கவனித்த வாறு
புலி பல்லைக் கடித்த படி பதுங்கிக்
காத்திருக்கும்.

೨೨

---

எதிரி ஈவிரக்கமற்றவன்; போர்வெறி கொண்டவன். எமது தாயகத்தைச் சிதைத்து, எமது இனத்தை அழித்து விடுவதையே இலட்சியமாக் கொண்டவன். அவனது இதயக்கதவுகள் திறந்து எமக்கு நீதி கிடைக்குமென நாம் எதிர் பார்க்க முடியாது. இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்வது?

நாம் தொடர்ந்து போராடுவதைத் தவிர, தொடர்ந்து எமது போரை தீவிரமாக்குவதைத் தவிர, எமக்கு வேறு வழி இல்லை.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

“தொழில் செய்யப் போனவைக் குச் சுட்டு நாலு பேரர் சரி” செபமாலைக் கிழவன் கண் சிவந்து தோன்ற... கண்டவர்களுக்கெல்லாம் செய்தி சொல்கின்றான்.


“ஆர் ஆர் அப்பு செத்ததாம்?” என்று மரியம்மா பதட்டத்தோடு வினவுகின்றாள்.

“சிங்களவன்களுக்கு நல்லொத்தான் வாய்க்குது எங்கட கடல்! தலைக் கறுப்பைக் காணவிடுறாங்களில்லை....” என்று மனத்துக்குள் புகைந்து புறுபுறுத்தபடி... செபமாலை அப்பு வீராப்போடு நடக்கின்றான்...

வானத்திலே வலம் வந்து உலங்கு வானூர்தி வேட்டுகளைத் தீர்க்க......

# வெல்லப்படுவதற்கான துயரங்கள்

○ ந. கிருஷ்ணசிங்கம்



“பிலிப்பையாவின்ரை மோன் எட்வேட்டும்..... சந்திராப்பிள்ளையும் மற்றது... செயோனும் மருமோன் கமிலஸ்சுவும் தான்.” பெருமூச்சொன்றை இழுத்து ஓய்கின்றான் கிழவன்.

“அந்தோனிக் கிழவா! ஏன் இப்பிடிச் சோதிக்கிறாய்! இவன் எட்வேட்டு கலியாணம் கட்டி ஒரு மாசமில்லை... ... அவன்ரை பெட்டை மேரி எப்பிடி இதைத் தாங்கப்போறாளோ?... திமங்கிலமடிப்பார்! எங்களை கடலிலை நிண்டு எங்கட ஆக்களைச் சுடுறாங்கள்.....” மான உணர்வு மரியம்மாவை முக்கிப் பேசவைக்கிறது.

படகுகளின் சஞ்சாரமற்று கடல் செத்துப்போய்க் கிடக்கிறது. சுறுசுறுப்பாக மீன்வியாபாரம் நடக்கும் சந்தைக் கட்டிடமும் ..... கடல் முற்றமும் வெறிச்சோடித் தெரிகின்றது. மீனில்லாத கடற்கரையில் காகங்கள் கூட இப்போது இல்லை.

விரக்தி ததும்பும் கிழவனின் விழிகள் கலங்குகின்றன. திரண்டு முறுக்கேறிய தனது கருமை நிற மார்பை; நிமிர்த்தி நடக்க முடியாத சோகத்தோடு; அவன் தளர்நடை போட்டபடி போகின்றான்.

எட்வேட்டின் வீட்டுப் படலையில் ஏகப்பட்ட சனக்கூட்டம் நிற்கிறது. பெண்களும் ஆண்களுமாய் அலறும் அழுகை ஒலி வெகு தூரமவரை கேட்கின்றது.

ஒன்றுக்குள் ஒன்று உறவுமுறை உள்ளவர்கள்... ஒரே படகில் சென்றவர்கள் ... வானுலங்கி பொழிந்த துப்பாக்கி ரவை மழையில் நனைந்து... இரத்தத்தில் தோய்ந்து .. இந்த உலகை விட்டுச் சென்ற செய்தி எல்லோர் மனங்களையும் ஆட்கொண்டு அலைய வைத்தது! ஒரே வீதியில் நடக்கும் நான்கு சாவீட்டுக்கும் மாறிமாறி அவர்கள் சென்றுகொண்டிருந்தார்கள்.

“இந்தக் கடலை விட்டிட்டு வேறை என்ன பிழைப்பையடா தம்பிமாரே நாங்கள் நடத்திற?......”

''அது உண்மைதான் எங்கடை கடலை நாங்கள் விடஏலா!......''

''இவன்களை அடிச்சுக் கலைக்கவேணும'' என்ற பலதரப்பட்ட பேச்சுக்கள் ஆக்ரோசத்தோடு அங்கு கூடிநிற்பவர்களால் முன் வைக்கப்படுகின்றன.

''துவக்கைத் தூக்கிக் கொண்டு தொழில் செய்யிற காலம் வரவேணும்...... பொய் இல்லை! அப்பிடியான நிலமை ஒன்று இங்கை வரவேணும். அப்பத்தான் நிம்மதியா நிண்டு தொழில் செய்யலாம்!......''

இளைஞன் பவுஸ்டீன் குரல் அங்குள்ளவர்களை உணர்வோடு தாக்கியது. அவனின் வலிய கைமுஸ்டி உயர்ந்து பதிந்த வேகத்தை வியப்போடு நோக்கினார்கள்.

''வெறும் கையா நிண்டு .. கையைத் தூக்கிக் காட்டி... கத்தீக் குழறி ஏன் சாகவேணும் நாங்கள்? சரிக்குச்சரி சரிக்சட்டிப் போட்டுச் செத்தாலும் பறவாயில்லை!......'' இது இளைஞனான இம்மானுவலின் குரல்......

''வெடிக்கு வெடி விழுந்தால் சிங்கள நேவி நிக்குமெண்டு சொல்லிறியே'' பவுஸ்டீன் சிரித்தபடி கேட்கின்றான்.

''எங்கை உவையள் நிக்கிற? ...... கடலிலை புரட்சி ஒண்டு வரத்தான் போகுது! கண்ட கண்ட இடங்களிலை உவன்களின்ரை போட்டுகள் பிரியத்தான் போகுது! நேவிக்கப்பலுகள் எங்கடை பெருங் கடலை விட்டு ஓடத்தான் போகுது! இருந்து பாருங்க இது நடக்கும்!'' என்று இம்மானுவல் கையில் அடித்து வெஞ்சினம் கூறுகின்றான்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டுநின்ற சிமியனின் சோகம் பாதி விலகிவிடுகின்றது...... அவனின் திரண்ட மார்பு மீண்டும் நிமிர்ந்து கொள்ளுகின்றது. துருதுருப்போடு அந்த இளைஞர்களை அவன் பார்க்கின்றான். அவனின் இதயத்தில் நம்பிக்கை ஒளி விடத் தொடங்கியது.

''பிரியமுள்ளவர்களே! அன்ரனி செபஸ்ரியான் என்ற இந்த இளைய மனிதனின் பிரிவு பரிதாபகரமானது! ...'' என்று குருவானவர் தனது பிரசங்கத்தைத் தொடங்கவும்: அங்கு நிலவிய கூக்குரல்கள் அடங்கி அமைதி தோன்றியது.

நான்கு கடற்தொழிலாளர்களின் உடல்களும் ஒன்றன்பின் ஒன்றாகப் போவது; மனங்களைப் பிழிந்து எடுத்தது. ஒவ்வொரு பிரேத வண்டிக்குப் பின்னும் தாயென்றும் — தந்தையென்றும் — மனைவியென்றும் — குழந்தையென்றும் — கூடப்பிறந்தோரென்றும் பின் தொடர்ந்து அழுதபடி செல்ல ஊர்வலம் சேமக்காலையைச் சென்றடைந்தது. வானத்திலே இரைந்து வந்து வட்டமிட்டுச் சென்ற 'சுப்பர் சொனிக்' குண்டு வீச்சு விமானத்தைக்கூட அவர்கள் பெரிதாக எண்ணி மிரளவில்லை.

நான்கு உடல்களையும் கிடங்குகளில் இறக்கிய .. கண்ணீரோடு மண்ணையும் அவர்கள் மேல் தூவுகின்றார்கள்.

''இந்தக் கிழட்டுக்கை எத்தினை இளசுகளுக்கு மண் போட்டிட்டுது'' என்று ஆற்றாமையால் குழறிய செபமாலைக் கிழவன்! ஒருபிடி மண்ணை ஆவேசத்தோடு அள்ளி தன்னுடைய தலையிலும் போட்டுக்கொண்டான்!

சைக்கிள் டைனமோவைச் சுற்றி; அதன்மூலம் பெறப்படும் மின்சாரத்தைக் கொண்டு வானொலி கேட்கும் விசுவலிங்கம் வீட்டில்; பலர் கூடியிருக்க ...... இலங்கை வானொலியின் செய்தி கேட்கின்றது.

''வடபகுதியில் குடாக் கடலில் புலிப் பயங்கரவாதிகளின் நடமாட்டம் முழுமையாகக் கட்டுப்படுத்

மா நகர சபை
யாழ்ப்பாணம்



தப்பட்டுள்ளது. நேற்றைய தினம் ஆகாயப் படையினரால் புலிப்பயங்கரவாதிகளின் படகொன்று யாழ் நகரத்தை அண்டிய கடலேரியில் வைத்து மூழ்கடிக்கப் பட்டது. அதில் பயணம் செய்த பயங்கரவாதிகள் அனைவரும் கொல்லப்பட்டார்கள்.''

வானொலிச் செய்தியைக் கேட்ட மரியம்மா ''இந்தக் கோதாரிப் போவாறதை கதையைப் பாரன்...இடிவிழுவாரை.. அந்தோனிக் கிழவா நீ நான் கேள்!'' என்று மண்வாரித் திட்டிவிட்டுச் சென்றாள்.

பகல் முழுவதும் அன்ன ஆகாரமின்றி சோர்வடைந்து தோன்றிய சிமியன் தளர்நடையோடு வீடு நோக்கிப் போகின்றான். தீவுகளில் தங்கி நிற்கும் இராணுவம் அசுரவேகத்தில் எறிகணைகளை, கடற்கரையோரத்திலுள்ள குடியிருப்புகளை நோக்கி..... இடைவிடாது ஏவிக்கொண்டிருந்தது.

அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறிவந்த மக்கள் அந்தோனியார் கோவிலிலும்...... பாடசாலையிலும் இராப்பொழுதைக் கழிக்கக் கூடுகின்றனர்!

ஒழுங்கைக்குள் இறங்கி நடந்துசெல்லும் சிமியனை, சம்மாட்டியார் தேவசகாயம் எதிர்ப்பட்டார்.

''சிமியனோ! இப்பத்தான் பேந்தாறேயா வீட்டை ... தெறிப்பார் செல்லடிக்கிறான்கள்! கவனமடாப்பா...'' என்று கூறி விலகிப் போகிறார்.

சனம் விலத்தும் பெரிய வயிற்றோடு ..... ஊசாடித் திரியும் சம்மாட்டியாரின் கள்ளுவண்டி கூட கரைந்து விட்டது!

குளித்த பின்; உலர்ந்த நாலுமுழத்துண்டை உடுத்தபடி வந்த சிமியனுக்கு மனைவி சோறு போடுகிறாள்.. மண்ணெண்ணை குறைந்த குப்பி விளக்கு மங்கிமடியும் ஒளியுடன் தெரிகிறது.

''பிள்ளையள் திண்டுட்டுதே பிலோமினா?'' என்ற சிமியன் கோப்பைமுன் குந்தியிருக்கிறான்.

''ஓ! அதுகள் திண்டுட்டுது!'' என்றவள் குப்பி விளக்கைக் குலுக்கி பெரிதாக எரியவைக்கிறாள். எறிகணைகள் வீழ்வது நின்றிருந்தது. பிள்ளைகள் பயம் தெளிந்து குந்திலே வந்து குந்துகின்றார்கள்.

''பிலோமினா! நீயும் உன்ரை சோத்தைப் போட்டு வாவன் இப்பிடி'' என்றவன் வெள்ளைப் பச்சை அரிசிச் சோற்றையும், கத்திரிக்காய் குழம்பையும் பெருமூச்சோடு குழைக்கின்றான். இதே கோப்பையில் கடல் கறிகளோடு ...... குத்தரிசிச் சோற்றை சுவைத்து உண்ட நினைவுகள் வந்து நெஞ்சைச் சுரண்டுகின்றன.

''பிலோமினா! உங்கை நீ என்ன செய்யிறா?...... கொண்டாவன் உன்ரை சோத்தையும்...... கதைச்சுக்கொண்டு தின்னுவம்'' என்றபடி ஒருவாய் சோற்றை அள்ளிய கையோடு நிமிர்ந்த சிமியன் முன்பாக...... பிலோமினாவின் வெறுங்கை நீளுகின்றது!

''குழைச்சுத்தாருங்க!'' என்றவளின் விழிகளிலிருந்து நீர் முத்துக்கள் உருண்டு விழுகின்றன.

''......தமிழர்களின் வீட்டை எரித்தார்கள், எரிக்காத வீடுகளில் புத்தபிக்குமார் சிங்களவரைக் கொண்டு போய்க் குடியேற்றினார்கள். அதற்கு மக்களால் மக்களுக்காக மக்களே தேர்ந்தெடுத்த அரசாங்கத்தின் ஆமி (Army) உதவி செய்தது......''

☐ ஒரு கோடை விடுமுறை நாவலில் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

□ □ □ □ □

**வன்னியின் பூர்வீக மொழி தமிழ்...... வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள் தமிழர்களுக்கே உரித்தான அனைத்து முத்திரைகளையும் உள்ளடக்கியனவாகவே காணப்படுகின்றன.**

□ □ □ □ □

# வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள்

□ முள்ளியவளை நடா. ரங்கநாதன்

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தெற்காக அகன்று பரந்து காணப்படும் நிலப்பரப்பே வன்னி எனப்படுகின்றது. இது வடக்கே யாழ் மாவட்டத்தையும் கிழக்கே இந்துமா கடலையும், தெற்கே அநுராதபுரம், தென் மேற்கே புத்தளத்தையும், மேற்கே இந்து மாகடலையும் எல்லைகளாகக் கொண்டு வன்னி வரையறை செய்யப்படுகிறது. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா என நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. வன்னிப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பிரதான தொழிலாக நெல்வேளாண்மை, உப உணவுப்பயிர் உற்பத்தி, காட்டுத் தொழில், மீன்பிடித் தொழில், கால்நடை, விவசாயம்; சிறு கைத்தொழில் முயற்சிகள், வியாபார முயற்சிகள் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளைக் கூறலாம். எனினும் இக் கட்டுரையானது வன்னியின் பண்பாட்டு விழுமியங்களையும் அவை அண்மைக் காலங்களில் சிதைவடையும் போக்குகளையும் ஆய்வு செய்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

*''வன்னி நாடு வளர்சோலை நாடு*
*வாரியம் மூன்று விளைவுள்ள நாடு*
*கன்னி நாடு கதிர்சோலை நாடு*
*காராளர் வாழும் கன்னியர் நாடு.''*

இப் பாடலானது பழம் பாடற்றொகுதியில் இருந்து வன்னியின் பெருமையினைக் கூறும் பாடலாக உள்ளது. இவ் வன்னிப் பிரதேசமானது. பூர்வீகம், மொழி இனம், பண்பாடு என்பவற்றில் தனிச் சிறப்பு வாய்ந்தது. கோணேசர் காலக் கல்வெட்டு

''வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள் இன்றைய காலகட்டங்களில் பெருமளவிற்கு சிதைவடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்குப் பல்வேறு காரணிகள்......''

ஒன்றில் வன்னிபம் என்னும் பெருமை மிக்க பட்டம் குளக்கோட்ட மன்னனால் வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், தென்னிந்தியப் படையெடுப்புக்கள், குடியேற்றங்கள் என்பவற்றுக்கும் வன்னிப் பிரதேசத்துக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது 'கல்லாடம்' 'சிலை எழுபது,' 'வன்னியர் புராணம்', 'வன்னியர் குல நாடகம்', 'வன்னியர் குலக் கல்யாணக் கொத்து' என்னும் நூல்கள் வன்னியரின் தோற்றம் பற்றிய கருத்துக்களைக் கொண்டுள்ளன. இந்த நூல் ஆதாரங்களின்படி வன்னி என்பது இன்றைய வரையறைக்கும் அப்பாற்பட்டு திருமலை, மட்டக்களப்பு ஆகிய கிழக்குப் பிரதேசங்களையும் உள்ளடக்கவதாகவே இருந்து உள்ளது. இது மட்டக்களப்பு மான்மியத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது பேராசிரியர் சி. பத்மநாதனால் ஆய்வு செய்யப்பட்டு, உறுதி செய்யப்பட்ட வரலாற்று உண்மைகளில் வன்னி பற்றிய ஆய்வுகளும் முக்கியம் பெறுகின்றன.

இருப்பினும் வன்னி என்னும் போது பண்டாரவன்னியனும், அவன் காலமும் இப் பிரதேசத்தின் வரலாற்றில் அழியாத இடம் பெற்றுள்ளன என்றால் அதிகம் தவறில்லை. வன்னியை ஆண்ட மன்னர்களுள் குலசேகரன் - வைரமுத்து பண்டார வன்னியன் என்னும் தமிழ் மன்னன் இப் பிரதேசத்தின் பூர்வீகம், பாரம்பரியம், வீரம், பொருளாதாரம் என்பவற்றின் பாதுகாவலனாக இருந்துள்ளான்.

ஆரம்பத்தில் இருந்து இப் பிரதேசங்களில் திராவிடர் குடியிருப்புக்கள் அமைந்த போது இங்கே வன்னியர்கள் தான் பூர்வீகக் குடியிருப்பாளர்களாக இருந்தனர் எனச் சோழர் காலக் கல்வெட்டுக்களில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. ''குவேறஸ்'' சுவாமியரின் கருத்துக்களும் இதனை வலியுறுத்துவனவாகவே உள்ளன.

வன்னியின் பூர்வீக மொழி தமிழ். (இதன் பூர்வீகக் கலாசாரம், பண்பாடு என்பனவும் தமிழரின் கலாசாரம், பண்பாடு ஆகியவையாகவே காணப்படுகின்றன.) சோழர் காலத்தில் அநுராதபுரத்திற் கட்டப்பட்ட சிவன் கோவில், அக்காலத்தில் கட்டப்பட்ட பனங்காமம் சிவன் கோவில், முல்லைத்தீவு குமாரபுரத்தில் அமைந்துள்ள முருகன் கோவில் (இவ்வாலயம் கர்ணபரம்பரைக் கதைகளுடன் தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது) என்பவற்றின் வரலாறுகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது இப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் இனம் தனித்துவமான பண்பாட்டினைக் கொண்டிருந்தது தெளிவாகின்றது. தனித் தமிழ் இனமாகவும் பூர்வீகக் குடியிருப்புக்கள் தமிழர் குடியிருப்புக்களாகவும் காணப்படுவதால், அந்நியர் இப் பிரதேசத்தைக் கைப்பற்றும் வரை தனிப் பெரும் பாரம்பரியத்தைக் கொண்ட பிரதேசமாகவே காணப்பட்டது.

## பண்பாட்டு விழுமியங்கள்:

பண்பாட்டு விழுமியங்கள் என்பது விழுமியங்கள் என்னும் வகையில் எல்லா இன மக்களுக்கும் ஏற்புடைத்தான விடயமாக

இருந்தாலும், பண்பாட்டு அடிப்படையில் தமிழர் பாரம்பரிய கலை, கலாசாரம் என்பவற்றினூடாக தமிழர்களுக்கு எனத் தனிப் பெரும் பாரம்பரியமும், கலாசாரமும், இந்த இனம் தோன்றிய காலம் தொட்டே உருவானவையாகக் காணப்படுகின்றன. இதனால் தமிழர்களுக்கான பண்பாட்டு விழுமியங்களின கன பரிமாணம் மிகச் சிறப்பு வாய்ந்ததுவும், பழைமை வாய்ந்ததுவுமாகும்.

வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள் அவை தமிழர்களுக்கே உரித்தான அனைத்து முத்திரைகளையும் உள்ளடக்கியனவாகவே காணப்படுகின்றன,

''வளமிகுந்த வன்னி நாடு வாங்க
எங்குது
வாழும் வழி காட்டுகிறேன் நான் வாங்க
எங்குது
எழவு விழுந்த அடிமை வாழ்வை அழுது
தொலைச்சிட்டு
ஏறு போல் நிமிர்ந்து பார்த்து வீட்டுக்கு
வாங்க''

என்னும் மூதூர்க் கவிஞர் ஒருவரின் கவிதையில் இருந்து வன்னியின் பண்பாட்டுக் கோலத்தினை நாம் காணலாம். வன்னிப் பிரதேசத்தின் பெரும் பகுதி கிராமப்புறங்களாகும். இக் கிராமங்கள் பெருமளவுக்குத் தமது பண்பாட்டு விடயங்களில் உறுதியாகவே இருப்பவை. வீட்டுக்கு வந்தாரை வரவேற்று உபசரித்தல். தமிழ் மொழியைப் பிற மொழிக் கலப்பின்றித் தமிழாகவே பாவித்தல், முதியோரைக் கனம் பண்ணுதல், மத அனுட்டானங்களிலும், கோவில் வழிபாட்டிலும் நம்பிக்கையும், கொண்டாட்டமும், உற்றார் உறவினர், அயலவரோடு நட்பும், கொண்டாட்டமும், திருமணக் கொண்டாட்டங்களில் தமிழர் பாரம்பரியம், பண்பாடு என்பவற்றை முழுமையாகப் பின்பற்றல், மரணச் சடங்கில் கிரியைகளும், இழவு கொண்டாடடம், விழாக்கள், பண்டிகைகள் என்பவற்றை பண்பாட்டின் அடிப்படையிற் கொண்டாடுதல், பாரம்பரியமான விவசாயம். பயிரிடல் முறைகளைப் பேணல், பண்பாடு தழுவிய மரபுக் கவிதைகள், நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், நடனங்கள், கூத்துக்கள் என்பவற்றை ஆடுதல், மேடையேற்றல் என்பன போன்றவை எல்லாம் வன்னியின் பண்பாட்டு விழுமியங்களாகவே காணப்படுகின்றன. ஆனால் இவை எல்லாம் இன்று இப் பிரதேசத்தில் நம்மோடு முழுமையாக இல்லை எனலாம். ஒரு இனத்தின் தனித்துவம் பேணப்பட வேண்டுமாயின், அந்த இனத்தின் பண்பாடு, கலை என்பன பேணப்படல் அவசியம்.

மாறாக வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள் இன்றைய கால கட்டங்களில் பெருமளவுக்குச் சிதைவடைந்து வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்குப் பல்வேறு காரணிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துவனவாக உள்ளன. இவற்றினை இயல்புக் காரணிகள், மனித நடவடிக்கைக் காரணிகள் என இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். முதலாவதான இயல்புக் காரணிகள் என்னும் வகையில், ஒரு குறிப்பிட்ட இனத்தினுடைய நாகரீகம், பண்பாடு கலை என்பன பல்வேறு தலைமுறைகள் மாறும் போது மாற்றமடையலாம். இத்தகைய மாற்றமானது மாறுதலடைய நீண்ட கால வேளையில் மெதுவான போக்கில் ஏற்படும் ஒரு நிகழ்வாகும். உதாரணமாக, திராவிடக் குடியிருப்புக்கள் வன்னிப் பகுதியில் நடைபெற்ற போது மொழியியல் ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் இருந்த நிலை மத்திய காலங்களில் இருந்திருக்கவில்லை. பின்பாக மன்னராட்சிக் காலங்களில் தமிழ் மொழியும் சைவ சமயமும் வளர்வதற்காகப் பல நடவடிக்கைகள் மன்னர்களால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கால ஓட்டத்தில் ஏற்படும் இயல்பான மாறுதல்களால் பண்பாட்டிலும், நாகரிகத்திலும் சிதைவு ஏற்பட்டமை மறுக்க முடியாத ஒன்றாகும்.

இரண்டாவதான மனித நடவடிக்கைக் காரணிகளை நோக்கும் போது, இன்றைய வன்னியின் பண்பாட்டு விழுமியங்களின் சிதைவில் இக் காரணியே பெருமளவு பொறுப்பேற்பதாக உள்ளது. இப்பிரதேசத்தில் ஆதித் தமிழர்கள் வாழ்ந்து வந்த காலத்தில் கலையும், பண்பாடும் பெருமளவுக்குத் தூய்மையாகவும், செழிப்பானவையாகவும் காணப்பட்டன. இந்நிலை ஆங்கிலேயர் இந்நாட்டின் உட்பாகங்களை கைப்பற்றியதில் இருந்து வன்னியின் ஆட்சியமைப்பு, மொழி சமயம் பண்பாட்டு நிலைகளில் மாறுதல் ஏற்படத் தொடங்கியது.

பின்னர் இந்நிலை இலங்கையின் ஆட்சியுரிமை சிங்களவர் கையில் மாறியவுடன் பாறத் தொடங்கியது எனலாம். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் வன்னிப் பிராந்தியத்தில் துரிதப்படுத்தப்பட்டதால் இன, மொழி, சமய, பண்பாட்டு ரீதியான முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின. முதலில் வவுனியா மாவட்டத்திலும், பின்னர் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்படலாயின. 1891 ம் ஆண்டில் எடுக்கப்பட்ட முதலாவது குடிசனக் கணிப்பின்படி 970 சிங்களக் குடும்பங்களே வவுனியா மாவட்டத்தில் காணப்பட்டன. இதிலும் மடுகந்தை என்னும் கிராமம் தான் முதன் முதலாக வன்னி மண்ணில் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றமாகும். ஆனால் இன்று வவுனியா மாவட்டத்தில் தோணிக்கல் என்னும் கிராமம் வரை சிங்கள ஆக்கிரமிப்பு நடைபெற்றுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கென்பாம, டொலர்பாம், கொக்கிளாய், நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பெற்றுள்ளன. மன்னார் மாவட்டத்தில் புத்தளமூடாக சிலாவத்துறை, கொக்குவெளி, முந்திரிகைத்தோட்டம் ஆகிய இடங்களிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பெற்றுள்ளன.

மேற்காட்டிய சிங்களக் குடியேற்றங்கள் வன்னியில் நிறுவப்பட்ட வேளையில் தமிழ் இனத்தில் பல்வேறு தாக்கங்கள் ஏற்படத் தொடங்கியது. பூர்வீகமாகத் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த நிலங்கள் பறிபோனமை, இவற்றில் இருந்த தமிழர் சொத்துக்கள் இழக்கப்பட்டமை, கோவில்கள், பாடசாலைகள் போன்ற நிறுவனங்கள் இடிக்கப்பட்டமை, மாற்றப்பட்டமை, தமிழ்மொழி பேசப்பட்ட பிரதேசங்களில் சிங்கள மொழி ஆதிக்கமுற்றமை போன்ற பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறின் அரசாங்கத்தால் திட்டமிட்டுப் பறிக்கப்பட்ட வன்னிப் பிரதேசங்கள் தமது பண்பாட்டு விழுமியங்களை மெல்ல மெல்ல இழக்கும் நிலைக்குள்ளாகத் தொடங்கின.

## அரச பயங்கரவாதம்

அரச பயங்கரவாத நடவடிக்கைகள் வன்னிப் பிரதேசத்தின் அன்றாட வாழ்க்கையை மட்டும் பாதிக்கவில்லை. நீண்டகாலமாகக் கட்டிக்காத்து வந்த கலை, பண்பாட்டு முறைகளில் பாரிய தாக்கத்தினையும் ஏற்படுத்தியுள்ளன. இராணுவக் கெடுபிடிகளால் வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தொகை நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளது. வன்னியில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்கள், அங்கே அவலமான முறையில் வாழ்க்கை நடாத்தும் மக்கள் கூட்டம் (மன்னார் மாவட்டத்தில் மடு அகதிகள் முகாம், முல்லைத்தீவில புதுக்குடியிருப்பு, விஸ்வமடு போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்கள்) பல்வேறு கலை பண்பாட்டு நடைமுறைகளுக்கு அப்பால் வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். இந்நிலை நீடிக்குமானால் தமிழ்ப்பண்பாடு ஒரு முரண்பாடான மாற்றத்திற்குள்ளாக்கப்பட்டு தன் தனித்துவத்தை இழந்து சீரழிந்து விடலாம்.

மேலும் அரச பயங்கரவாத நடவடிக்கையால் இந்தியாவுக்கு ஓடிப்போன தமிழ்

மக்கள் மீண்டும் இங்கே திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஏறக்குறைய இரண்டு வருடங்கள் அங்குள்ள புனர் வாழ்வு நிலையங்களிலும், தனியார் வீடுகளிலும் வாழ்ந்து ப்போது அங்கிருந்து அனுப்பப்படும் பட்சத்தில் இங்கு வந்து தனியான அகதிமுகாம்களில் உள்ளனர். இவர்களின் நடத்தைகள், ஒழுங்குகள் இன்னொரு நிலையில் உள்ளது. இந்தியாவில் இருந்த போது அங்கு கொள்ளப்பட்டு வந்த பழக்க வழக்க, நாகரீக முறைகளில் ஈர்க்கப்பட்டு, ஆனால் அதனிலும் முழுமை பெறாது எமது மரபு முறைகளையும் கொள்ளாது புதிய முரண் தன்மையுடையோராகக் காணப்படுகின்றனர்.

அரச வன்செயல்களால் வன்னியிற் காணப்படும் பல வழிபாட்டுத் தலங்கள் முற்றாக அழிக்கப்பட்டோ, சேதமாக்கப்பட்டோ உள்ளன. உதாரணமாக முல்லைத்தீவு வீரகத்திப் பிள்ளையார் கோவில், கள்ளப்பாடு முருகன் கோவில், வற்றாப்பளை அம்மன் கோவில், முல்லைத்தீவு சென் மேரீஸ் தேவாலயம் திருக்கேதீஸ்வரம் சிவன் கோவில் போன்ற வரலாற்றுப் புகழ்பெற்ற கோவில்கள் இன்று அழிக்கப்பட்டுள்ளமை எமது கலை, பண்பாடு என்பவற்றைக் குழி தோண்டிப் புதைக்கும் செயற்பாட்டின் வடிவமாகவே காணப்படுகின்றது. இத்துடன் முல்லைத்தீவு நகரில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது இராணுவ முகாமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். (முல்லைத்தீவு நகரம் இப்போது தடைசெய்யப் ட்ட வயலம் என்பது குறிப்பிடத்தக்கது) இந் நடவடிக்கை எமது இனத்தின் கல்வி கற்கும் சந்ததியை ஒரு இருண்ட சமுதாயமாக மாற்றும் நடவடிக்கையாகவே உள்ளது.

## பயிரிடல் நடவடிக்கைகள்

வன்னியின் பாரம்பரியங்களுள் பயிரிடல் முறைகளும் குறிப்பிடத்தக்கவை. "ஆடி விதை தேடி விதை" எனும் முதுமொழிக்கேற்ப பருவ காலங்களுக்கு ஏற்பப் பயிரிடல் நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வந்தன. நிலம் பண்படுத்தலுக்காக மாடுகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. செயற்கை உரத்தை நம்பியிராமல் இயற்கை உரப்பாவனையும், அதற்கு ஏற்ற நெல்லினங்களையும் பயிரிட்டனர். அறுவடையின்போது 'பரத்தை வெட்டு' என்னும் முறையில் கிராம விவசாயிகள் பலர் ஒன்றுகூடி நாட்டார் பாடல்களையும், கிராமியப் பாடல்களையும் பாடி அருவி வெட்டி, மாடுகளால் சூடு மிதித்தனர். இந்தச் செழிப்பான பாரம்பரியம் மறைந்துவிட்டது. இப்போதெல்லாம் பருவ மழை பொய்த்து விடுகின்றது. பண்படுத்தல், சூடு மிதித்தல் எல்லாம் இயந்திரங்கள், செயற்கை உரப்பாவனை என மாற்றமடையப் பரத்தை வெட்டு முறை, நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள் எல்லாம் மருவிச் செல்கின்றன. நவீன முறையிலான பயிர்ச்செய்கை முறை உற்பத்தி அதிகரிப்புக்கு வழிகோலியமை ஏற்கப்பட வேண்டியதே. ஆனால் நம் பாரம்பரியம் மறைந்து விட்டமை வேதனைக்குரியது.

வன்னியின் வரலாற்றினையும், அதன் பண்பாட்டுப் பாரம்பரியத்தினையும் மாபுக் கவிதைகள், நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், சமூக நாவல்கள், வரலாற்று நாவல்கள் போன்றன மூலம் வெளிக்கொணரப்பட்டன இப்பங்களிப்பில் சொக்கன், புலவர் அரியநாயகம், வன்னியூர் வேலன், முல்லைமணி வே. சுப்பிர

மணியம், மூதூர்க் கவிஞர், அ. பாலமனோகரன், வையாபுரி ஐயர் முதலியோர் முக்கிய மானவர்களாவர். இத்தகைய மரபுக் கவிதைகள், நாட்டார் பாடல்கள் என்பன அண்மைக் காலங்களில் தோன்றுவது மிகவும் அருகிவிட்டன. இந்தத் தலைமுறையினரின் பின்பாக இத்தகைய முயற்சிகளில் இன்றைய தலைமுறையினர் அதிகம் ஈடுபாடு கொள்வதாகத் தெரியவில்லை. இதில் முல்லைமணி அவர்கள் எழுதிய பண்டார வன்னியன் என்னும் வரலாற்று நாடகம் இப் பிரதேசத்தின் வரலாறு, வீரம், அரசியல் என்பவற்றில் ஒரு குறிப்பிடத்தக்க ஆய்வு என்றே கூறவேண்டும்.

மாற்றமடையும் அரசியற் சூழல்கள் வன்னி வரலாற்றில் முக்கியமான ஆய்வினை வேண்டி நிற்கின்றன என்பது உண்மையே. மாறிவரும் வன்னியின் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் காலப்போக்கில் இம் மண்ணிலேயே எம்மை தனித்துவமான பண்பாடு அற்றதோர் தன்மையை ஆக்கலாம். அவ்வாறாயின் மாவீரன் பண்டார வன்னியனின் புகழ் பாட நாம் அருகதையற்றவர்கள். முதலில் பறிபோன நிலப் பரப்பில் மீண்டும் தமிழ்ப் பண்பாட்டினை உருவாக்க முயற்சிப்போம். அருகிச் செல்லும் பண்பாட்டு விழுமியங்களை மீண்டும் தனிப்பொலிவோடு இங்கே வளர்த்தெடுப்போம். அதற்காக முதலில் இச் சமுதாயத்தின் பல்வேறு மட்டங்களில் இருந்தும் முற்போக்குச் சிந்தனைகளை உருவாக்க வேண்டும்.

சைக்கிள் உதிரிப்பாகங்களை
மலிவு விலையில்
பெற்றுக் கொள்வதற்கு
மல்லாகத்தில் நம்பிக்கையான இடம்

லக்கி சைக்கிள் பலஸ்
காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்.

# எங்கள் பொழுதும் இனிதே

□ சோ. பத்மநாதன்

வர்த்தகம் செய்ய வழிகள் பல இருக்கு
யுத்த நிலைமை மிகச் சாதகமாய்த் தானிருக்கு
மின்சாரம் இல்லை விளக்கெரிக்கும் மண்ணெண்ணெய்
தன்பாட்டுக்கு ஏறும். இறங்கும். தலைமறையும்
பொம்மர் கிளாலிக் கடல் மேல் பறந்தாலோ
நம்ம சனம் விலையை நாலு மடங்குயர்த்தும்
தீப்பெட்டியைக் கண்டு மாசம் இரண்டாச்சு
மாப்பெட்டி, சீனி, மருந்து வகைகளெல்லாம்
உச்சவிலை தேங்காய் இருபதுக்கு மேலாலை...

வர்த்தகம் செய்ய வழிகள் பல இருக்கு
யுத்த நிலைமை மிகச் சாதகமாய்த் தானிருக்கு

பொச்சு மட்டை ஈரம், புகையாய்க் கிளம்புதடி
பூவரசு, வேம்பு, புளி, இலுப்பை, மஞ்சமுன்னா
வெட்டிப் பிளந்து விறகாக்கினோம்—எல்லாம்
ஒட்ட முடிய, உள்ளேபோய் வேரெல்லாம்
தோண்டி எடுத்துச் சுடுதண்ணி வைக்கின்றோம்!
ஆண்டிகளைப் போலப் பல்லாயிரம்பேர் வீடுகளை
விட்டுப் புறப்பட்டு வீதி வழி பிள்ளை—
குட்டி தொடர நடக்கும் கொடுமையிடை,
வாந்தி, இருமல், வயிற்றோட்டம், மலேரியா
சூழ்ந்து வருத்தும்; சுகப்பட்டாம் என்றாலோ
மாத்திரைகள் வாரா வடக்கே! அதற்கென்று
யாத்திரை போக முடியுமா? கிளாலியினைத்

தாண்டும் துணிவு தமிழரிடை அதிகம்!
மீண்டும் தொடங்கும் மிடுக்கும் மிகஅதிகம்!
ஆனபடியால், அயராது, இவர்கள் முன்
போன வழிவிட்டு புதுவழியிற் போகின்றார்

வர்த்தகம் செய்ய வழிகள் பல இருக்கு
யுத்த நிலைமை மிகச் சாதகமாய்த் தானிருக்கு......

கர்ப்பூரம், சைக்கிள், கடதாசி, மின்கலங்கள்
இப்பால் வருதல் இலங்கை அரசாங்கத்தின்
பாதுகாப்புக்குப் பழுதாம்! விளக்கங்கள்
தோதாகச் சொல்வார், நாம் துக்கப்படுவதில்லை!
கோயில் விழாக்கள், குடிபுகுதல், கல்யாணம்
மாவீரர் வாரம் வெளியீட்டு வைபவங்கள்
இங்கு குறையின்றி எல்லாம் நடந்தேற
எங்கள் பொழுதும் இனிதே கழிகிறது!

காற்று வெளியில் கனக்கும் விறகுசுமை
ஏற்றி வருவோரை ஏறெடுத்துப் பார்ப்பதுண்டா?
ஓயா உழைப்புக்கு இவர்கள் உதாரணங்கள் —
சாயாத சற்றும் சலிக்காத உள்ளத்தோர்!
வேலை வாய்ப்பென்று வெளிநாடு செல்வோர்தம்
எண்ணிக்கையால் பிழைப்போர் ஏராளம், ஏராளம்!
கண்ணிற் படாமல் காசோடு போனவர்கள்
ஏராளம்! என்றாலும் இத்தனைக்குப் பின்னாலும்
தாராளமாய் ஓடும் தமிழர் தொகை அதிகம்
ஆரோடு நோக? ஆருக்குச் சொல்லி அழ?
ஊரோடு ஒத்தோடவா? உய்யவழி தேடவா?
போரோயக் காணோம் புகைமண்டலத்திடையே
ஆராரோ என்றே அவதிப் படுகின்றோம்!
ஈமத்தெழும் நெருப்பும் எரிந்து தணிவதுண்டு
சாமத்திருளும் விலக, விடிவதுண்டு
வாழ்வை நினைப்பவர்கள் மனஞ்சோர்ந்து வாடிப்போய்
வீழ்வாரோ? காண்போம் விடிவு!

”

அநேகமாக இரண்டு கைக்குண்டுகளை வைத்திருப்பாள். வாகாய் எறிவதில் வலு சூட்டிகை. விசாரித்தால்,

''தாக்குதல்களில என்ர பங்குக்குப் போதுமானதெண்டு நினைக்கிறன்.''

''அவங்கள் தங்கட படைப் பலத்தை பெருக்கிறாங்களெல்லே? புதுப்புது ஆயுதங்கள், கனரக வாகனங்களெல்லாம் வாங்குறாங்கள்!''

கொள்ள வேணும். அதில படிக்கிறதுக்கு நிறைய இருக்கு.''

முன்னேறத்தான் முயற்சிக்கட்டுமே எதிரிப்படை? அதே தீவிரம். சீற்றத்தை எதிரிப்படையிலருக்கு உணர்த்தியே சாகும் கைக்குண்டுகள்.

நோக்கு...... நீண்ட நெடியது, அகன்று பரந்தது. உள்ளார்ந்தத்தே கனல்.....

''என்ன பாடுபடுகுதுகள் எங்கட சனங்கள்! வீடுவாசல்களை விட்டு,

## "அம்மா...! சின்னத்தங்கச்சிக்கு கை ரண்டும் எடுத்தாச்சாமெண!...

# வீரி

☐ செ. பொ. சிவனேசு

## "கை பொருத்தினா குண்டெறியக் கூடியதாய் பழகலாமோ?"

''உண்மைதான். நாங்களும் எங்கட போர்த்திறனை வளத்துக் கொள்ள வேண்டியிருக்கு. தவிர்க்கேலாது. எங்களுக்கு ஆயுதம் குறியில்ல—வழி அவ்வளவு தான்.''

மக்களுள் இறங்குவதெனில் ஆர்வக்குதிப்பு.

''மக்களுக்கெல்லாம் அரசியல் விழிப்பை ஊட்டவேணும். அவேன்ர வாழ்க்கை முறையளைத் தெரிஞ்சு

உடமையளை இழந்து..... உவங்களைக் கெதியாக் கலைக்க வேணும்; மிச்ச நிலங்களையும் மீட்கவேணும?''

2

சமர்க்களத்தே சாதாரணந்தான். நொடிப்பொழுது அதிர்ந்து போகாமலும் இயலவில்லை. அவளுக்கு இப்பிடியே நடக்கவேணுப்!

பாரிய தளமொன்றின் மீதான கடுந்தாக்குதல்; கடுஞ்சமர். முதன்மைக் காவலரண்களிடம் முன்னேறும்

மாநகர சபை யாழ்ப்பாணம்



வாய்ப்பு. முன்னேறினாள்—நீளவாட்டாய், முகக்குப்புற, முழங்கைகளின் பக்கவாட்டுக்களைப் பதித்து நகர்கையில் நாசமாய்ப் போவான்களின் மிதிவெடி .....

அண்ணன் அதிரடித்தான் வீட்டை; அடைபட்ட தொண்டை திணறிக் கமறியது.

"அம்மா..! சின்னத்தங்கச்சிக்கு ..... கை ரண்டும்... எடுத்தாச்சாமெண! ....."

"ஐயோ..... என்ர குஞ்சு!....."

அடுக்களையுள்ளிருந்து பறந்து வந்து கதறல்; பின்தொடர்ந்து நெஞ்சிலத்தபடி ஓடிவந்தாள். குலைந்து விழப்பார்த்தாள் தலைவாசற்கதவை, நிலையைப் பிடித்தாள்.
முற்றம் தெரியவில்லை, ஊர்,

"எப்பவாம்?"—

"எங்கயாம்?"—

"என்னெண்டாம்?"

அவசரமாய் மிதிவண்டியை எடுத்தான். உடுத்திருந்த சேலை உடுத்தபடி. பதறினாலும் தொற்றினாள். தோற்பொருக்குகள் வெடித்த மிதிவண்டி. முதுமை. தளர்வாய் முனகியது. மூச்சைப் பிடித்து முடுக்கினான். பொது மருத்துவமனை நோக்கிச் சக்கரக் குதிரைகள்.

எல்லோருக்கும் இல்லை அனுமதி அம்மாவுக்கும் அண்ணனுக்கும். தெரிய வந்தது இரண்டு நாட்களின் பின். கட்டிலில் பார்க்க முடிந்தது நினைவு திரும்பாத நிலை. பேச வகையில்லை இரண்டு மூட்டுக்களிலும் நீட்டி நின்றது முழங்கை வரை. கட்டுத் துணி வெண்மை செம்மையுட் தன்னை யிழந்து ........ தேசியக் கொடியின் பிம்பத்தை பிரதிபலித்து......

மருத்துவமனை – ஒலமிடுந் தொந்தரவுகளுக்கெல்லாந் தடை. தன்னையே அடக்கமாட்டாது அம்மாவையும் அடக்கவெனத் திணறினான்.

3

ஆழ்மனத்துள் வேதனைவேர் காய்ந்து விடவில்லை—எளிதல்ல. உணர்வுகளைப் பட்டென்று கொட்டி விடுகிற மேல்மனம் ஆறிவிட்டது. மீளவும் பார்க்கச் சென்றனர். வழியிடை சொன்னான்;

"அங்கை வந்து அழுதுகொண்டு நில்லாதையெணையம்மா. ஏற்கனவே அது மனம் நொந்து போய் இருக்கும். நீங்களும் கூட்டிப் போடாதேங்கோ! கூடியளவுக்கு ஆறுதல் சொல்லித் தேத்தப்பாருங்கோ."

செல்வது தளத்திற்கு. தன் தளத்திற்கே போயிருந்தாள்; வீடு செல்ல வன்மையான மறுப்பு.

"எனக்கு வேலை வீட்டில இல்ல. தளத்திலயும் களத்திலயுந்தான்."

அசைக்கவியலாப் பிடிவாதம்.

4

அசந்தே போனாள் அம்மா. தளத்துள் வைத்த முதலடியோடே உறைந்தாள். அண்ணனுந்தான். வாயிற் தூரிகை; ஓவியம் வரைந்து கொண்டிருந்தாள்.

சிலநொடிப் பொழுது. தோழி ஒருத்தி அம்மாவை அணுகினாள்; சலனிக்க வைத்தாள்.

"இதென்னம்மா அதிசயம்? இப்ப அவ காலால பேனை பிடிச்சு எழுதவும் பழகுறா தெரியுமே?"

திறம் ஓவியம். வானம்; கருமுகிற் திரள்கள்; ஊடுருவியபடி ஒரு பறவை.

சின்ன வயசிலேயே கெட்டிக்காரி. ஆரம்பப்பள்ளிக் காலத்திலேயே நல்ல ஆர்வம். அநேகமாய் வரைந்தபடியே தான். ஒரு வட்டம், ஒரு நேர்கோடு, வட்டத்தின் சற்றுக் கீழே, நேர் கோட்டில் இருந்து இருபுறமும் சத்தாராய் இரு சிறிய கோடுகள், இவ்விதம் அடி முடிவிலும் இரண்டு. எழுதிக்கொள்வாள்; 'அம்மா'. அப்பாவுக்கும் இன்னொன்று. முதிர் பார்வையில், விளக்குமாற்றுத் தடிக்குப் பனங்கொம்பை கொழுவியது போல. எட்டாம் வகுப்பளவில் நன்றாகவே வரைந்தாள். ஆசிரியர் அவள் கைகளை...... அந்த இரு கரங்களை.. கண்களில் ஒற்றத் தூண்டுகிற அளவுக்கு வரைந்து காட்டினாள்.

ஓவியத்திலிருந்து இன்னுந் தன் கண்களைப் பிடுங்கிக் கொள்ளவில்லை அண்ணன். என்ன இது? பறவைக்குச் சிறககளைக் காணேல்ல? ..... ஆனா, வேகமாய் பறக்கிறமாதிரியே இருக்குது ... இதென்னெண்டு ..? எண்டாலுஞ் ..... சிறகு......

ஏதோவித இயல்பூக்கம்; அவன் வசமின்றியே,

"சிறகுகளக் கீறேல்......"

திடுதிடுப்பாய்த் தன்னுணர்வு; அந்தரங்கமாய் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

திரும்பியவள் புரிந்து கொண்டாள் அ[illegible]மித்தாள்.

"எட, எப்ப வந்தனீங்கள் ... அம்மா, என்ன பேசாமல் நிக்கிறீங்கள் ....."

ஓவியத்தைப் பார்த்தாள்.

"... இந்தப் படம் இப்பிடித்தான் அண்ணை. பறவைக்குச் சிறகுகள் இருக்காது. தலையங்கம் என்ன தெரியுமே?...... நம்பிக்கை."

5

கொடுக்கத்தான் வந்தவர்கள். பெற்றார்கள். ஆறுதல் வார்த்தைகள், தேறுதல் மொழிகள் — அவர்களுக்கு அவள்.

"அம்பது லச்சம்வெச்சிருக்கிறவன் ரண்டு ரூவா துலைஞ்சாக் கவலைப்படுவனே? ஒரு நட்டமுமில்லை. போனது ரண்டு கைதான—இன்னும் அம்பது லச்சம் கையள் இருக்கு!"

திரும்புகிற வழியிடை பேச்சு மூச்சில்லை திகைப்பு, அதியம், மெல்ல மெல்லப் பெருமிதம்.

சூ.... என்ன நெஞ்சுரம்! என்ன சர்வசாதாரணமாகக் கதைக்கிறாள்! ...... என்ன துணிச்சலப்பா! முந்திச் சின்னக் காயமெண்டா காணும்...... குழறலோ? ... காலில சின்னக் கல்லடிச்சா வீடே தலகீழாப்போம்...... இப்ப?.ஆ... எல்லாம் வளர்க்கிற வளப்பில தான்..... கீறுறது, எழுதுறது சரி. மற்றப் பிள்ளையளிட்டை இப்பிடியுமெல்லே அடிக்கடி கேக்குதாம்:

"கை பொருத்தினா குண்டெறியக் கூடியதாப் பழகலாமே?"

சொந்தமண்ணில் நாங்கள்
தொழில்செய்து தொல்லையின்றி
குந்தி யிருந்த
குடிசைகளைக் காணவில்லை
காட்டில் வயலில்
கடலில் நாம் பாடுபட்டுக்
கூட்டியள்ளிக் கொண்டுவந்த
குன்றுபோற் செல்வமெல்லாம்
குண்டால் அழித்த
கொடுமையினை என்னென்போம்!



பண்டிருந்து நாங்கள்
பசியாறச் சோறுதந்த
செந்நெற் கழனியெங்கே?
தேன்சிந்தும் சோலையெங்கே?
மன்னர் அரண்மனைபோல்
மாடங்கள் எங்கே? ஓ!

வைத்தமுலை வாயகலா
வாறு குழந்தை - தாய்
செத்துக் கிடக்கின்ற
செய்தியிங்கே! - கொல்லும்
வெறிபிடித்த சிங்களமே!
விட்டுவிடு! - நல்ல
நெறிபிடித்து வாழநினை!

நீயெறிந்த குண்டின்
குழியினிலே - புல்லு
முளைக்குமென்றெண் ணாதே;
புலிமுளைக்கும்! - பொல்லாப்
புயல்கிளம்பும்! - வல்ல
எரிமலை வாய்வெடிக்கும்

என்பதறி! - உண்மை
புரிகிறதா? - நில்லாதே!
போய்த்தப்பு!

மாடே! - உன்
குண்டிலே எங்கள்
குலமானம் சாகவில்லை!
பண்டைநாள் வீரம்
பழுதாகிப் போகவில்லை!
கண்டிருப்பாய்! - கையில்
கலமேந்தி வெங்களத்தில்
துண்டுதுண்டாய் உன்னைத்
துளைபோட்டுக் கொன்றொழிக்க —

பாயுங் கரும்புலியாய்ப்
பாசறையின் காவலுடை
வாயிலில் வந்து
மறம்விளைத்து மாண்டார்கள் —
நஞ்சையுண்டு மான
நயங்காட்டி மாய்ந்தார்கள் —
வெஞ்சமரில் மாற்றார்

# கைமண் கூடப்பிறன் காலடிக்குள் போகாது

□ வீ. பரந்தாமன்

வெறியடக்கி வீழ்ந்தார்கள் —
பார விழுப்புண்கள்
பட்டுமே தங்களுடை
வீர மடங்காத
வேங்கைகள் இன்னுமுண்டு!

எம்மண் இனியும்
இரங்காது! - ஒருபோதும்
கைம்மண் கூடப்பிறன்
காலடிக்குள் போகாது!

இனியிங்கு,
எழுதுகோல் தூரிகை யாழ்
ஏரோ (டு) உளியும்
வலிதண் (டு) அகப்பை

மறுவிலா ஏடெவையும்
போர்க்கருவி யான
புதுமைபார்! - இந்தமண்ணில்
பூத்தமலர் - கன்றோடு
தாயும் புலியாய் —
புயலாய்க் களத்தில்
போயினபார்! - மேலும்
மயக்கத்தை விட்டுவிடு!
மற்றுன் நினைவுபோல்
புல்லுமுளை யாது!—
புலிவீரர் நிற்கு(ம்)நடு
கல்லு முளைக்கும்நீ,
கண்டிடுவாய்! - இங்கே
அருந்தவங்கள் செய்த
அடல்வீரர் தாமுள்ளார்!

மண்மீட்கச் சென்று
மயிர்மீட்க எண்ணிடான்—
விண்ணிடிந்து வீழ்ந்தாலும்
வீரம் விடாதவன்—
கண் அனையான் - எங்கள்
கரிகாலன் தம்பியெனும்
இந்நிலத்தோர் போற்றும்
பிரபா தலைவனுள்ளான்!
எட்டி உதைத்தால்
இமயமலை தள்ளாடும்
தொட்டே அரவணைத்தால்
பட்டமரம் பால்சுரக்கும்!

அன்னான்றான்,
காட்டும் வழியில்
களம்நோக்கிச் சென்றெதிரி
பூட்டும் விலங்குடைத்துப்
பொன்போல் விடுதலையை
மீட்டு வருவோம்
விரைந்தெழுங்கள்! - எங்களது
நாட்டை இனிநாமே
நன்றாக ஆண்டிருப்போம்!

மண்ணோடு தோன்றும்
மறத்தமிழர்! - நாங்களிங்கு
எண்ணோடாக் காலமெல்லாம்
வாழ்ந்தவர்கள்! - தாயைவிட்டு
ஏதிலியாய் எந்நாடும்
சென்றிரந்து வாழ்வதிலும்
சாதலது மேலாகும்!
தன்மானம் இல்லாமல்
ஏதிலார் காலடியில்
எச்சிலிலைக் கேங்குவதோ?
போதுமப்பா புன்மைப்
புலைவாழ்வு!

வாருங்கள்!—
ஆள நினைப்போர்
அணிவகுத்து நில்லுங்கள்!—
நாளை விடியலை
தம்கைக்குள் பொத்திடுவோம்!
ஈழப் புலிக்கொடியை
ஏந்தும் மறவருக்கு
வாழ உரைப்போமே வாழ்த்து!

*"ஒடுக்கப்படும் உலகமக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும் விட எமது போர்க்குரல், இன்று உலகரங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்திரப்போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களை விட சாராம்சத்தில் வித்தியாசமானது; தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது. ஒப்பற்ற சிறப்பம்சங்களைக் கொண்டது."*

**தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

வீடியோப்பட விமர்சனம்

# தமிழோசை

□ கருப்பறவை

'மாவீரரைப் போற்றுதல் என்பது தமிழீழ மக்களின் இரத்தத்துடன் கலந்து விட்ட ஒன்று' என்ற செய்தியுடன் (ஒலிக்கத்) தொடங்குகின்றது தமிழோசை. படத்தின் ஆரம்பக் காட்சியில் என்ன உணர்வு ஏற்பட்டதோ அதை அப்படியே தக்கவைத்து சுமார் ஒரு மணித்தியாலம் வரை பார்வையாளர்களை ஈர்த்திழுத்தது இந்த ஒளிப்பதிவு நாடாப்படம் *(Video Film)* என்று சொன்னால் 01-01-1993 அன்று யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இருந்த எவரும் இதனை மறுத்துரைக்க மாட்டார்கள். இந்த வகையில் இப்படம் மிகப்பெரிய வெற்றியை ஈட்டி விட்டது.

தென்தமிழீழத்தின் மட்டக்களப்புப் பகுதியில் நடைபெறுவதாகக் கதை அமைந்துள்ளது. அதனைக் கருத்திற் கொண்டு படப்பிடிப்பிற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பைப் பற்றித் தெரிந்தவர்கள் அனைவருக்கும் கடுக்காவெளியிலோ, வெல்லாவெளியிலோ, சிவத்தப்பாலத்திலோ இருப்பது போன்ற உணர்வேற்படுகிறது. மற்றவர்களுக்கு "இவ்வளவு அழகானதா எங்கள் தேசம்?" என்று இதயம் ஆனந்தக் கூத்தாடுகின்றது.

இந்த இடங்களை தேர்ந்தெடுத்த இயக்குனரையும் அழகாகப் படமாக்கிய படப்பிடிப்பாளரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அதேபோல பாத்திரப் படைப்புக்கேற்ப உடையலங்காரத்தில் மிகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ரிக்ஷாக்காரனையும், பிச்சைக்காரனையும் மடிப்புக் குலையாத வர்ண ஆடைகளுடன் காட்டும் தென்னிந்தியத் திரைப்படங்களிலிருந்து மாறுபட்டு நிற்கிறது.

தனிநபர்களைச் சுற்றியதாக அல்லாமல், உறுதிமிக்க மக்கள் கூட்டத்தினரை கதாநாயர்களாகக் கொண்டு கதை பின்னப்பட்டுள்ளது. போராட்டம் என்பது அனைவருக்கும் சொந்தமானது என்று முரசறைகிறது இந்தப் படம்.

இப்படத்திற்கு இசையமைத்திருப்பவர் அருணா. இசைத்துறையில் 25 வருடங்கள் அனுபவமிக்கவர் தான் என்பதை நிரூபித்திருக்கிறார் அவர். பாடல்களில் ஜெயா சுகுமார் பாடிய முதலாவது பாடல் ஏனைய பாடலை விட மிகச்சிறப்பாகவுள்ளது.

நடிப்பினால் இப்படத்திற்கு உயிரூட்டுபவர்கள் என்று ஒருவரை மட்டும் குறிப்

"தனிநபர்களைச் சுற்றியதாக அல்லாமல்
உறுதிமிக்க மக்கள் கூட்டத்தினரை
கதாநாயகர்களாகக் கொண்டு கதை
பின்னப்பட்டுள்ளது. போராட்டம் என்பது
அனைவருக்கும் சொந்தமானது என்று
முரசறைகிறது இந்தப் படம்.

பிட்டுச் சொல்ல முடியாது. அது ஒரு நீண்ட பட்டியல். மாவீரர் தினத்தன்று எவருக்கும் தெரியாமல் ஆலயமணியினை ஒலித்து விட்டு வந்த மகன், தந்தை தன்னைச் சந்தேகப் பட்டதும் ''நான் உங்கள் மகன்'' என்று துடிப்பது — இதே பாத்திரம் இராணுவத் தால் சுடப்படும் காட்சி, ''செத்தவீடு'' என்ற பதிலைக் கேட்டும் ''அதுக்கேன்ரா அழுகிறாங்க?'' என்று கேட்டுவிட்டு ''பத்தே பத்து நிமிசம் தருவன். அதுக்கிடேல எல் லாத்தையும் காலியாக்கிடோணும்'' என்று எச்சரிக்கை செய்யும் தேசத்துரோகி, அரை குறையாகக் கட்டப்பட்ட பாடையை பீதி யுடன் தூக்கியபடி ஓடிவரும் அயலவர்கள், தொடர்ச்சியான இழப்புகளுக்கு போராளி களே காரணம் என்று குறை கூறும் மனை யை ''உங்கடை ஆக்களைப் போல......'' என்று கோபம் கொள்ளும் கணவன் — இதே பாத்திரம் தேசவிரோதி தமது உரை யாடலை கேட்டுவிட்டானென்றதும் ''இல்லைக்கிளி......'' என்றபடி சமாளிக்க முயல்வது, கொடூரத்தனத்தை முகத்தில் சுமந்தபடி வரும் இராணுவச் சிப்பாய்கள், மணியடிக்கும் குழந்தை — தனக்கெதிரே நீளும் 'பிஸ்டலை'ப் பார்த்தபடி தொடர்ந்து மணியடிக்கும் போது... அதன் முகபாவம், ''அப்பே ரட்ட ..'' என்றபடி வரும் திமிர்பிடித்த இராணுவ அதிகாரி — தொடர்ந்தும் குழந்தை மணியடிக்கும் போது அவரது முகபாவம், இராணுவச் சுற்றிவளைப்பில் அகப்படும்பொதுமக்கள்... இவ்வாறாக அனைவருமே இயக்குனர் எதனை எதிர்பார்த்தாரோ அதனை அப் படியே கொண்டுவந்திருக்கின்றார்கள். எனி னும் இதேயளவு சிறப்பை ஆரம்பத்தில் தனது வீட்டைப் பார்க்கவரும் பொது மகனை இராணுவத்தினர் தாக்கும் காட்சி யில் காணமுடியவில்லை. அதில் செயற் கைத்தனம் உள்ளது. எனினும் அதனைத் தொடர்ந்து அந்தக் கொடூரமுகம் தலைய சைப்பதும், கால் வெட்டப்படுவதும் மிகத் தத்ரூபமாவுள்ளது இரத்தத்தை உறைய வைக்கும் காட்சி இது. தனது மாமனுக்கு தேசவிரோதி அடிக்கும் காட்சியும் சிறப் பாகவுள்ளது.

ஆரம்பத்தில் சுவரொட்டியை ஒட்டியது நான் தான் என்று கூறும் நடிகரிடம் இயல் பான நடிப்பைக் காணமுடியவில்லை. பிர பலமான தென்னிந்திய நடிகரொருவரின் பாதிப்பை அவரில் உணர முடிகிறது. ஏனையவர்களிடம் தனித்துவமான நடிப்பைக் காண்பதால் இதில் நிறை வில்லாதமாதிரி எமக்கு உணர்வேற்பட் டிருக்கலாம். சிலகாட்சிகளின் உரையாடல் களில் இயல்புக்கு மாறான இடைவெளியை உணரமுடிகிறது. இந்த ஒளிப்பதிவு நாடா இயக்குனரின் முதல் அனுபவமாகையால் இது மிகச்சிறிய விடயமே.

அத்துடன் மட்டக்களப்புத் தமிழின் இனிமையை முழுமையாக இதில் உணர முடியவில்லை அந்தப் பிரதேசத்தில் பிறந்து, வாழ்ந்த கலைஞர்கள் நடித்திருந் தால் இதில் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். எனினும் அந்தப் பேச்சு வழக்கை மிகக் கூடியளவுக்கு கொண்டுவர முயன்றிருக்கின் றார்கள்.

தென்தமிழீழத்தின் அவலங்களை தத் ரூபமாகத் தெரிவிக்கின்றது இப்படம். இவ் வளவு அவலத்திற்குள்ளும் நிமிர்ந்து நிற்கும் பாத்திரங்கள் ''நீங்கள் இதுவரை என்ன செய்துவிட்டீர்கள்?'' என்ற கேள்வியை எம்முள் எழுப்புகின்றன. மனச்சாட்சியுள்ள எவரையும் பாதிக்கக்கூடிய படம் இது.

மொத்தத்தில் தான் சொல்ல நினைதத கருத்தை அழுத்தந்திருத்தமாக தெரிவிப் பதில் வெற்றி கண்டிருக்கிறார் நெறியா ளர். கடலைக்கொட்டை சாப்பிட்டுக் கொண்டோ, தேனீர் குடித்துக் கொண் டோ பார்க்கும் விதத்தில் இப்படம் அமை யவில்லை. மாவீரர் சுடரேந்தியபடி நிற்கும் பொதுமக்கள், அவர்களை இராணுவ ஜீப் கடந்து வருவது — இக்காட்சியில் இந்தத் தேசமக்கள் என்பதற்காக நிமிர்ந்து கொள் கிறோம். இந்திய இராணுவத்தின் காலத் தில் தேசத்துரோகிகளின் அச்சுறுத்தல்களின் மத்தியில் அன்னை பூபதியின் இறுதி ஊர் வலம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றிய செய்தியையும் இது நினைவுபடுத்துகிறது. அரங்கிலிருந்து வந்து வெகுநேரம் வரை இந்தப்படம் ஏற்படுத்திய உணர்விலிருந்து விடுபடமுடியவில்லை. இதுவே இந்தப்படத் தின் வெற்றி.

௦௦

# வெளிச்சம்

தை - 1993
இதழ் - 10

இலக்கியம் என்பதென்ன?
இலங்கிடும் உள்ளத்துணர்வு.
இலக்கியம் மனிதவாழ்க்கை.
இவையெல்லாம் பேசும் எழுத்து.

கலையும், இலக்கியமும் மனிதனின் வாழ்வுக்காக என்றால்......
மனிதனின் வாழ்வு எதற்காக? தன்னைத் தானே
ஆளுகின்ற ஆட்சி, யாருக்கும் அச்சமில்லாத நிலை,
கவலையில்லாது கால்நீட்டி உறங்கும் மகிழ்ச்சி,
நெறிதவறாது வாழுகின்றோம் என்ற நிம்மதி தன்னினத்தின்
கலைகளையும், பண்பாடுகளையும் பேணி வளர்த்து
காலத்துக்கு இசைவாக அதை மாற்றியமைக்கும்
உரிமை - இப்படியாகவும் இன்னும் பலவாகவும்
வாழ்க்கைக்கு அர்த்தங்கள் நீளும்.
இந்த அர்த்தங்கள் பொதிந்த வாழ்க்கையை நோக்கி
மனிதனை நகர்த்துவதும், அதைக் கைகளுக்குக் கிடைக்கச்
செய்ய மனிதனைப் போராடத் தூண்டுவதுமே
கலை, இலக்கியங்களின் முதன்மைப் பணியாகும்.

இன்று தமிழீழத்தமிழினம் தன் இறைமைக்காகவும்,
வாழ்வுக்காகவும் எழுந்து நின்று போராடிக்கொண்டிருக்கிறது.
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தத் தேசியப்
போராட்டத்தின் தலைமையை ஏற்றுள்ளது.
எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்
பிரதம இராணுவத் தளபதியாக நின்று சரித்திரம்
படைக்கும் இந்தச் சமரை வழிநடத்திக்கொண்டிருக்கின்றார்.
பல்லாயிரக்கணக்கான வேங்கைகள்
வெற்றியையும், வெற்றிமூலம் எமது
தாயகத்தின் விடிவையும் இந்தத் தலைமுறையே
பெற்றுவிடவேண்டுமென்று சூளுரைத்துக் களத்திலே
காலபதித்து நிற்கின்றனர். நிச்சயம்
வெல்லும் இந்தப் போராட்டம் என்ற
அசைக்கமுடியாத நம்பிக்கையில் தமிழீழ

மக்கள் அனைவரும் புலிகளுடன்
ஒன்றிணைந்து நிற்கின்றனர்.

எதிரியே தன் இயலாமையை எடுத்துச் சொல்லத் தொடங்கிவிட்டான். உலகம் ஆரம்பத்தில் எமது போராட்டத்தைப் பார்த்துக் கேள்விக்குறியானது. இன்று ஆச்சரியக் குறியாகி நிற்கின்றது. புத்தகங்களிலும், தத்துவங்களிலும் படித்த போர்ச்சம்பவங்களும், வீரதீரச் செயல்களும் இன்று எமகாலடிக்குள்ளே நின்று கண் சிமிட்டுகின்றன.

எலலாம் சரி. இந்தப் போராட்டத்தை இன்னும் இன்னும் எழுச்சியுற வைக்கவும். நடைபெறும் இந்தச் சத்தியப் போரை உலகுக்கும், அடுத்தடுத்த தலைமுறைக்கும் உணரவைக்க யாரால் முடியும்? எவருக்கு அந்த வரலாற்றுக்கடமை உண்டு?

இங்கு எதிரியால் சிறகு முறிக்கப்படும் சின்னச்சின்னச் சிட்டுக்களின் உணர்வுகளையும், சாவையே தன் தோள்மீது ஏற்றிக்கொண்டு. எதிரிபாடும் பாசறைக்குள்ளே புகுந்து அவனை எரித்துவிட்டு, அங்கேயே விழுந்தும், சிலவேளை திரும்பியும் வரும் வேங்கைகளின் போர் திறனையும் வரலாறாக்க எவரால் முடியும்? யார் மீது இந்தப் பொறுப்பை காலம் சுமத்தியுள்ளது.

எல்லாவற்றையும் எமது கலை, இலக்கியப் படைப்பாளிகளின் கைகளிலே தந்துவிட்டு காலம் காத்திருக்கின்றது. வரலாற்றுத் தவறிழைத்தனர் தமிழீழப் படைப்பாளிகள் என்ற வசைச் சொல்லை நாளைய எங்கள் தலைமுறை இன்றைய படைப்பாளிகளை நோக்கி எறியக்கூடாது என்று வெளிச்சம் விரும்புகின்றது.

எதிரிபாடிய பாசறைக்குள் வெடி
ஏற்றிநிறைத்த வண்டியை ஓட்டியே
புதியதான சரிதம் படைத்திடும்
புலிகள் மீதிலோர் பாடலைப் பாடடா
விதியை வரித்துள வீணையைத் தூக்கியே
வீதிதன்னிலே வீசியே எறியலாம்
அதிகமேன்! புலிவீரத்தைப் பாடடா
ஆருளர்? அவரேனுளர் எனலாம். ”

# முதல் முட்டை

□ செம்பியன் செல்வன்

ஆதியே அநாதியான காலப்பெருவெளியில்...... அக்னிக் கோளம் எனச் சுழன்று... சுழன்று எரிந்தும் கரிந்தும் சுருங்கியும் அமைதி கண்ட பிரபஞ்சத் தோற்ற காலத்திலே......

நீர் அரும்பி சமுத்திரமெனப் பரவி...... விரிய.... ஓரணுக்கள் கொண்ட உயிரினமென உருக்காட்டி, கடற்பஞ்சு, பாசி, பவளப் பாறை ... முதல் மீன் முதற்றாவரம் எனப் பரிணாமம் கொண்ட உயிரினங்கள் பாலூட்டிகள்... பறவையாக பல்கிப் பெருகித் தோற்றம் கண்ட கால வேளையிலே .....

ஒரு நாள்.

குயில் ஒன்று நீண்ட தூரம் அலைந்து திரிந்து, தனது தேவைக்கு வாகான இடமொன்றைத் தேடிக் களைத்தபோது—

அந்தமரம் அதன் கண்ணில் பட்டது.

உலகத்து உயிர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காகவே, விரிந்த கரமென வானோக்கி உயர்த்தியபடி கொப்பும் கிளையுமாக....

குயில் அந்த மரத்தை நோக்கிப் பறந்தது

அந்த மரத்தின் கிளைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இலைகளால் நிரப்பப்பட்ட பச்சைப் பஞ்சணைக் கூடுகளாக விளங்கின.

குயில் ஆனந்தராகம் இசைத்தவாறு தனது சுதந்திரமான முதல்முட்டையை அந்தக் கூட்டில் இட்டுவிட்டு உல்லாசமாக பறந்து சென்றது. தேவை ஏற்படும் பொழுது எல்லாம் அங்கு வந்து போயிற்று

□ □ □

சில நாட்கள் கழிந்தன.

அந்த இடத்தை நோக்கி இன்னொருகரும் பறவையும் வேகமாகப் பறந்து வந்தது. அந்தப் பறவையின் உடலிலும் இது வரை தோன்றாத புத்தம் புது உணர்வுகள்.... வேதனைகள்.

விபத்தோ... விதிக்கப்பட்ட இயற்கையின் நியதியே, என்றறிவுணர்வு எதுவுமில்லாமல் குயிலின் முட்டையுள்ள கூட்டிலேயே சென்றமர்ந்தது. அதன் அவசர நிலையில் சுற்றுச் சூழல் எதுவும் புரியவில்லை.

“ இதற்கு ஒருவழி... ஆ! .. அதுதான்
சரியான வழி. இதுகளை வழிக்குக்
கொண்டுவரும் வழி.
பொருளாதாரத்தடை ”

இடம் கிடைத்த திருப்தி. நிம்மதி.

காலாதிகாலமாக குயிலுக்கும் காகத்திற்குமிடையே போராட்டம் எழக் காரணமாக இருக்கப் போகிற நிகழ்ச்சிக்கு வித்திடப்படுகிறது என்பதனை உணராமலேயே, அந்தக் கரும்பறவையும் தனது முட்டையை அதே கூட்டில் இட்டது.

நாளடைவில் முட்டைகள் பெருகி அடைகாக்கவும் தொடங்கியது.

☐ ☐ ☐

உதய சூரியனின் மெல்லிய வெப்பக் கதிர்களின் அருட்டலில் அந்தப் புதிய தலைமுறை கண் விழிக்கின்றது.

நீலவானம் வைகறையின் குளுமையில் தென்றலைக் குளிப்பாட்டி அனுப்பியதா......? கவிழ்ந்த பூக்கிண்ணமென வானம் விளங்க...... எங்கும் உயிர்ப் பூக்களின் உயிர்த்துவ நடனம் ...... வியப்பின் எல்லையில் மூழ்கிய அவற்றின் இறக்கைகளின் படபடப்பில் எழுந்த காற்றுக்களே சுதந்திரக் காற்றுக்களின் ஆதார சுருதியாகின்றன. தமது சுதந்திரம் என்பது இறக்கைகளின் 'படபட'ப்பில் தான் என்பதனை அவை உணர்ந்த போது பெருமிதத்தில் அவற்றின் நெஞ்சம் விம்மியது. கூரிய சொண்டு பிளக்க ....... செந்நிறக் கண்டத்திலிருந்து முதற் குரல்......

பூங்கனிகள் உதிர்ந்து சிதற......

பூபாள ராகமென.... அண்டத்தையே நிறைக்க

'குக்கூ...... கூ.... குக்கு ஊ......'

☐ ☐ ☐

'கா!... கா!... கா...!'

'குக்கூ...... கூ.... குக்கு ஊ......'

''இதென்ன விரசம்...? அபஸ்வரம்......?

காகங்கள் மயங்கித் திகைக்க......

'குக்கூ...... கூ.... குக்கு ஊ......'

'எங்கிருந்து எழுகிறது இந்தக் குரல்...... மதுரக் குரல்... '

''எங்கள் குரலை ஏளனம் செய்யும் இந்த இனிய''...

அமிர்தமொழியின் சொந்தக்காரர் யார்?...... யார்?......

காகங்களும், காகக் குஞ்சுகளும் கூட்டையே சுற்றிச் சுற்றி வந்தன.

எங்கள் கூட்டிலே ஈதென்ன விரிசல்? .....

எங்கள் குரலிலே ஈதென்ன விரிசல்? ......

சப்த விரிசல்! நாத உடைவு! .... ... சுரபேதங்கள்......

கூட்டையே சுற்றி வந்த அண்டங்காகம் ஒன்று உண்மையைப் புரிந்து கொண்டது.

'கர்ர்ர் கா... கர்ர்ர்... கா......'

''காகம் கரையலாயிற்று''

'அந்நியர்கள்... துரோகிகள் ... முதலில் மெலிதாக எழுந்த குரல் நேரம் செல்லச் செல்ல பெரிதாகி அந்தப் பிராந்தியத்தையே அவலம் கொள்ளச் செய்தது.

☐ ☐ ☐

காகங்கள் தம் எதிர்ப்பை விரோதத்தைக் காட்டத்தலைப்பட்டன. குயிற்குஞ்சுகளை கொத்திக்குதறத் தொடங்கின. கூட்டை விட்டு அப்புறப் படுத்த முனைந்தன.

'இந்தக் கூடு எங்களுடையது. இதற்கு உரிமை

யாளர் நாங்கள் '— காகங்கள் பலமாகக் கரைந்தன.

குயில்கள் கேட்டன.

'அது எப்படி....? நாங்கள் இந்தக் கூட்டிலேயே உயிர்த் தெழுந்தவர்கள் '

'அப்படி ஒரு போதும் இருக்க முடியாது... பாருங்கள் எங்களை எண்ணிக்கையில் பெரும்பான்மையினர்...... நீங்கள் சிறுபான்மையினர்...... ஆதலால் நீங்களே இடையில் வந்தவர்கள்...'

'நீங்கள் இவ்வளவு பேர் விழித்திருக்க நாங்கள் எப்படிப் புதிதாக வந்திருக்கமுடியும்... நீங்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கலாம். ஆனால் உரிமையில்...... நாங்களே சொந்தக்காரர்...?

'அக்கிரமம்... அநியாயம்...'— காகங்கள் கரைந்தன.

'எப்படி... எப்படி...'

'நீங்கள் இந்தக் கூட்டிற்குச் சொந்தம் பாராட்டிக் கொண்டிருந்த வேளையில் நாங்கள் அங்கு வந்தோமா?......'

'இல்லை... இல்லை...'

'ஆனால் எங்கள் சந்ததிகள் அங்கிருந்து உருவாகிறார்கள்! '

'ஆமாம்... அது தான் எப்படி?...' - காகங்களின் அலறல்.

'ஆக...நீங்கள் வருமுன்னரே நாங்கள் அங்கு வாழ்ந்திருக்கிறோம். என்பதனாற்தான் இப்படியாகிறது. நீங்கள் எங்கள் பிறப்புரிமையை மிக மிக ஆழத்தில் ஆராய்ந்து பார்த்தாலும் கிடைக்கும்... ஆனால் உங்கள் பிறப்புரிமை பின்னாளில் தான் இக் கூட்டோடு உறவு கொண்டாடும்...'

'போதும் ... போதும் நிறுத்துங்கள்...'

□ □ □

இந்தப் பேச்சுவார்த்தைகள் குயிற்குஞ்சுகளின் உள்ளத்தில் உரம் ஊட்டின. குயில்களுக்கும் காகங்களுக்கும் கடும் போர் மூண்டது.

குயிற்குஞ்சுகளை காகங்கள் வெளியே இழுத்தெறிய முனைந்தன. குஞ்சுகள் கூட்டைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டன. இதனால் கூடு பலமாக ஆடத்தொடங்கியது. பல சமயங்களில் கூடே கவிழ்ந்து தம்குஞ்சுகளும் தரையில் விழுந்து விடுமோ எனக்காகங்கள் எண்ணத் தொடங்கின மரஉச்சியிலிருந்து தம் குஞ்சுகள் விழாதிருக்க வேண்டுமென்றால் பலாத்தாரத்தால் பயனில்லை. வேறு வழிதான் பார்க்க வேண்டும் எனக் காகங்கள் கருதின.

- 'இதற்கு ஒரு வழி... ஆ!.. அதுதான் சரியான வழி. இதுகளை வழிக்குக் கொண்டுவரும் வழி ..'

பொருளாதாரத்தடை

காகங்கள் தங்கள் குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொணர்ந்து ஊட்டின. குயில்கள் குஞ்சுகளை நெருங்கா வண்ணம் பார்த்துக் கொண்டன. தாய்க் குயில்கள் கொண்டுவந்து போடும் இரையையும் தாமே கவர்ந்து கொண்டன.

குயிற்குஞ்சுகள் தம் பசியின் வேதனையை யாருக்கோ முறையிடுவது போல் கூவத்தொடங்கின.

'குக்கூஊ....கூ....க்குகூ'

வானின் வெற்று வெளியில் குயில்களின் சோகக்குரல் கலந்தது.

- மேற்குலக வானம் பாடிகளோ 'எங்களுக்கு எதிராக எழுந்து வரும் இக் கானத்தை இசைப்பவர்கள் யார்?. எங்கள் மகிமை இவர்களால் களங்கப்பட்டு விடாதா?... கிழக்கிலிருந்து வரும் இந்தக் குரலின் சொந்தக் காரர் யார்?... இந்தக் கானத்தை இவர்

கள் எழுப்பமுடியாமல் எப்படியாவது செய்துவிடுங்கள்...' - எனக் காற்றிற்குத் தூது அனுப்பினர்.

குயில்களின் அழுகைக்குக் கூட மேற்தலகு தடை விதிக்க முற்பட்டதா?...

□ □ □

காகங்களின் எல்லாவித எதிர்ப்புகளையும் தம் ஆத்மபலத்தையும், வைராக்கியத்தையும் கொண்டு குயில்கள் முறியடித்தன.

கூட்டில் தங்கள் பகுதியை பாதுகாக்க குயில்கள் ஒழுங்குமுறையில் இயங்கத் தொடங்கின. இறகு முளைத்த... பறக்கத் தெரிந்த குயில்கள்... எல்லாம் ஒரே நேரத்தில் இரை தேடச் செல்லாமல்... சில கூட்டில் இடம்பறிபோகாமல் பார்த்துக் கொள்ளவும், சிறகு முளைக்காத குயிற் குஞ்சுகளை பாதுகாக்கவும் தங்கிக்கொள்ள மற்றவை இரை தேடிச் செல்லும்...

காகங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

'மரக்கிளை அகதிகளே வெளியேறுங்கள்!..' - என்று கத்தித் தீர்த்தன.

குயில்கள் சிரிக்கத் தொடங்கின.

'நீங்கள் மட்டும் என்னவாம்..? நீங்களும் மரக்கிளை வாணர்களே! அறியாமையிலிருக்கும் நீங்கள் இந்த உலகைக் கொஞ்சம் விழித்துப் பாருங்கள் இக்காட்டின் மரங்கள் யாவும் ஓரினம்தானா?. உயரம்... பருமன்... நிறம்... கிளை... இலை எல்லாவற்றிலும் எத்தனை வேறுபாடு? அவை ஒவ்வொன்றும் காட்டினை உரிமை கொண்டாடுகின்றனவா? அதுமட்டுமல்ல... எத்தனை எத்தனை வகையான பறவைகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் மரங்களைக்கூட அவமானப் படுத்திவிட்டீர்களே... எங்களை மரக்கிளை அகதிகள் என்பதன் மூலம் சீ...சீ.. நன்றி கெட்டவர்கள் நீங்கள்... அவர்கள் உங்களை விரட்டியடிக்க எவ்வளவு நேரமாகும்...

''போதும்... நிறுத்துங்கள்...உங்கள் அதிகப் பிரசங்கத்தை'' - என்றவாறு குயிற்குஞ்சுகளின் மீது பாய்ந்து குதறத் தொடங்கின.

- குயில்களின் கண்கள் சிவப் பேறத்தொடங்கின புதியதொரு இளஞ்சூரியனின் வெம்மைச் சிவப்பு விழிகளிலே மெல்ல மெல்லக் குடியேறத் தொடங்கியது. குரலிலும் வெம்மை கலந்த சோகம், வளிமண்டலம் எங்கும் கலக்கத் தொடங்கியது.

-காட்டிலே கடுங் காற்று பேய் போல வீசத் தொடங்கியது. காய்ந்து வெம்மை கொண்டிருந்த மரக்கிளைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளத் தொடங்கின.

செங்கண் குயில்கள் எழுப்பிய அக்கினி இராகம் காட்டை வலம் வர...வர...

அக்னிக்குஞ்சொன்று காட்டின் ஒரு மூலையில் எழ காகங்கள் கத்திப் பறக்கலாயின.

99

''தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதானால பெண்ணினம் தனது இழிநிலை பற்றி விழிப்புக் கொள்ள வேண்டும். தலைவிதி என்றும், கர்மவினை என்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும காலம் காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

தெரு நாடகம் என்று அறியப்படும் இந்த மூன்றாம் வகை நாடகத்தை தமிழ்நாட்டுக்குச் சமீபத்தில், அதாவது எழுபதுகளின் இறுதியில் அறிமுகப் படுத்தியது வீதி என்ற அமைப்புத்தான். சமீபத்தில் என்றுநான் கூறுவதின் நோக்கம் இதற்கு முன்னால் சுதந்தரப்போராட்ட காலத்தில் இந்த நாடக வடிவம் போராட்ட ஆயுதமாக தமிழ் நாட்டில் எங்கேயாவது பயன்படுத்தப்பட்டதா என்பது பற்றிநமக்கு தெளிவாகத் தெரியாது. மேலும், கூத்து,



# தமிழ்நாட்டில் வீதி நாடக இயக்கம்

□ கே. வி. ராமசாமி

**பார்வையாளர்களோடு பௌதீக இடைவெளியை முற்றாக இல்லாமல் செய்ய முயல்வது, மேடையை மறுப்பது, ஒளி ஒப்பனைகள் இல்லாமல் இருப்பது, என்ற இந்த நாடகவடிவம்...**

ஜாத்ரா போன்ற நமது புராதன கிராமிய நாடக வடிவங்கள், ப்ரோசீனியம் மேடையின் தட்டை வடிவமைப்புக்குள் அடங்குவது அல்ல என்பதுவும், வீதி நாடகம் பற்றிய சமஸ்கிருத பழைய நூல் ஒன்று இருப்பதாகவும் நான் ஒரு நாட்டிய மணியின் மூலம் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் இங்கு வலியுறுத்த விரும்புவது இந்த வகை நாடகம், முற்றிலும் புதிய கண்டு பிடிப்போ நமக்கு அன்னியமானதோ. அல்ல நமது மரபில் இருப்பதுதான்.

ஒரு மாலைப் போதில் மெரீனா கடற்கரையில் இலக்கியத் தொடர்புடைய சில இடதுசாரிச் சிந்தனையாளர்கள் கூடிப் பேசியதில் பிறந்ததுதான் வீதி. இதில் பங்கு கொண்ட பெரும்பான்மையோர் மத்திய மாநில, ஸ்தாபனங்களில் அல்லது வங்கியில் பணி புரிந்த மத்தியதர வர்க்க அறிவு ஜீவிகளே. தொடக்கத்தில் இது ஒரு புதிய நாடக வடிவாக்கம் என்ற கலை பூர்வமான பிரக்ஞையை விட, தங்கள் ''எதிர்ப்புக் குரல்'' வெளிப்பாட்டுக்கு சுலபமான வலுவான ஒரு ஊடகமாகத்தான் இவர்களால் இது கருதப்பட்டது.

நான் பல இடங்களில் பல முறை கூறியிருப்பது போல, பார்வையாளர்களோடு. பௌதீக இடைவெளியை முற்றாக இல்லாமல் செய்ய முயல்வது, மேடையை மறுப்பது, ஒளி ஒப்பனைகள் இல்லாமல் இருப்பது, என்ற இந்த நாடக வடிவம், வடிவ அமைப்பிலேயே உள்ளார்ந்த ஒரு சமூகப் பார்வையை, ஒரு மதிப்பீட்டை தன்னகத்தில் கொண்டிருக்கிறது. 'வீதி'யும் தன் அமைப்புவடிவில் இதே மதிப்பீடுகளை'

பார்வையைக், கொண்டிருந்தது. இதில் தலைவர், செயலாளர், அங்கத்தினர்கள் என்று கிடையாது, அனைவரும் கூடி ஒரு வட்ட வடிவில் அமர்ந்து விவாதித்து ''வீதி'' யின் செயல்பாடுகளை முடிவு செய்வர். இதில் இதுவரை போடப்பட்ட எந்த நாடகத்தையும், யாரும் நான்தான் இதன் நாடகாசிரியர் என்றோ, நான்தான் இயக்கினேன் என்றோ பெருமை பாராட்ட முடியாது.

இதில் நாடகம் போடப்பட்ட முறை ரொம்பவும் வினோதமானது. நாடகம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்ட நாளில் மதியம், நாங்கள், பல்கலைக் கழக வளாகத்தில் கூடுவோம். எங்களில் யாருக்கும் அன்று மாலை என்ன நாடகம் போடப்போகிறோம் என்று தெரியாது. சந்தித்த நாங்கள் பல்வேறு சமூக, அரசியல் பிரச்சனைகள் பற்றி விவாதிப்போம். பார்க்கும் யாருக்கும், அவர்கள் இன்று மாலை ஒரு நாடகம் போடக் கூடியிருக்கிறார்கள் என்று தோன்றாது. விவாதத்தின் இடையில் யாராவது அன்று மாலை போட வேண்டிய நாடகத்தின் கருத்தையும், உருவத்தையும் Suggest செய்வார்கள். பின் விவாதத்தில் எல்லோருடைய பங்களிப்புடனும், அந்த நாடகம் செழுமைப்படுத்தப்படும், பின் யார் யார் என்ன பாத்திரத்தை ஏற்பது என்று தீர்மானிக்கப்படும். யார் என்ன பேச வேண்டும் என்ற அடிப்படை மட்டும் சொல்லப்படும். பின் அவர்களே தங்கள் வசனங்களை Styleயைத் உருவாக்கிக் கொள்வார்கள் பாத்திரத்தின் வாயில் ஆசிரியனின் வசனத்தை திணிக்கும் வழக்கம் வீதியில் கிடையாது. பின் இரண்டு அல்லது மூன்று ஒத்திகை பார்த்தபின் நாங்கள் எதிரே உள்ளவர் கடற்கரை நோக்கி நடக்கத் துவங்குவோம்.

இப்படி மேடையேற்றப்பட்ட அல்ல நிகழ்த்தப்பட்ட நாடகங்கள்தான் 'பசி' 'வேலை' 'நவீன புத்தன்' 'சடுகுடு' 'சுயம் வரம்' 'கயிறு' 'அக்கினிப் பிரவேசம்'. இன்னும் சில நாடகங்கள். பிரக்ட்டின் மொழி பெயர்ப்பு நாடகம் '*Exception and the rule*' மட்டும் எழுத்து வடிவம் பெற்றது.

அனுபவத்தால் இவர்கள் இந்த நாடக வடிவின் சக்தி. இவர்களால் சென்றடையக்கூடிய மக்கள் தொகையின் எல்லை, தங்களது போதிய பயிற்சி இன்மை, இவைகளை உணர்ந்தனர்.

தாங்கள் பயிற்சி பெறவும், ஒருங்கிணைந்த பல்வேறு சிறுசிறு குழுக்கள் மூலம் இந்த நாடக வடிவை தமிழ்நாட்டின் எல்லா ஊர்களுக்கும் கொண்டு செல்லவும் கருதி, நண்பர் கோ. ராஜாராமின் உதவியுடன், சென்னை சோழ மண்டலத்தில், பாதல் சர்க்காரின் பத்து நாள் நாடகப் பட்டறை நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்தும் நண்பர்கள் வந்து பங்கு பெற்றனர். இலங்கையிலிருந்துகூட நண்பர் அன்டனி ஜீவா பயிற்சி பெற்றார்.

ஆனால், மத்தியதர அரசு ஊழியர்களான இவர்கள் தங்கள் எல்லைகளை யதார்த்தத்தில் பார்க்க மறுத்தது, இவர்கள் எல்லைகளைக் கணக்கில் கொள்ளாது தூரத்திலிருந்து இவர்களை இயக்க முயன்ற புறச் சக்திகளின் தலையீடு, ஐக்கிய வாழ்வு, கூட்டுச் செயல்பாடு முதலிய அடிப்படை கோட்பாடுகளை மறந்து, தன் முனைப்போடு செயல்படத்துவங்கிய சிறிய ஈகோக்களின் மோதல், இன்னும் பல காரணங்களால் இந்த வீதி என்ற நாடக இயக்கம் ஒரு அகால முடிவை அடைந்தது.

ஆனால் வீதி துவக்கிய இந்த சோதனை முயற்சியும், தமிழ்நாட்டின் நாடகப் படைப்பாளிகளை ஒருங்கிணைத்து அது நடத்திய பாதல் சர்க்கார் நாடகப் பட்டறையின் அனுபவங்களும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இன்னும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. ☉☉

— நன்றி வெளி

சகல விதமான
சுப முகூர்த்தப்
# பட்டுப் புடவைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

# ராசி சில்க்ஸ்

70, நவீனசந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

இன்றைய நாகரீகத்தை
உங்களுக்குத் தருவது
'அகிலன்ஸ்'

சேட்டிங்ஸ்,
சூட்டிங்ஸ்,
காஞ்சிபுரம் புடவைகள்,
பட்டுச் சேலைகள்,
கல்யாண வேட்டி,
சிறுவர் சிறுமியருக்கான
சகல அலங்கார ஆடைகளுக்கும்

ஏற்றதோர் எழில் கூடம்
**அகிலன்ஸ் புடவை அகம்**

உங்கள் புன்னகையில் ஒளிர்வது
**'அகிலன்ஸ்'**

அனைவரும் வருக
**'அகிலன்ஸ்' தரும் பலன் பெறுக**

# அகிலன்ஸ் புடவை அகம்

**யாழ்ப்பாண வீதி,**
**கிளிநொச்சி.**

பலசரக்குப் பொருள்கள்,
சாய்ப்புச் சாமான்கள்

ஏகவினியோகஸ்தர்கள்

பாலவிநாயகர் ரேடர்ஸ்

நெருக்கடியான இந்த நாட்களில்
தட்டுப்பாடான பொருட்களையும்
மக்களின் சேவைகருதி வழங்குபவர்கள்

பாலவினாயகர் ரேடர்ஸ்
கந்தசாமி கோவிலடி,
யாழ் வீதி,
கிளிநொச்சி.

# FASHION HOUSE

**65, K.K.S. Road, JAFFNA.**

எம்மிடம்

அலுமினியம், எவர்சில்வர்
பாத்திரங்கள்
பீங்கான் கோப்பைகள்
அழகுசாதனப் பொருட்கள்
சிறுவர் சைக்கிள்கள்

மற்றும்

தற்கால நாகரிகத்திற்கேற்ற வகையில்
தயாரிக்கப்பெற்ற

நாகரிகப் பொருட்கள்
விளையாட்டுப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

யாவும் நிதானவிலையில் கிடைக்கும்.

# பெஷன் ஹவுஸ்

65, கே. கே. எஸ். வீதி, (போன்: 23046) யாழ்ப்பாணம்.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள்
கொள்வனவு, விற்பனவு

எம்மால் தயாரிக்கப்பட்ட
மிளகாய்த் தூள், மஞ்சள் தூள்
மற்றும் அரிசி வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

# ஞானம்ஸ் ஸ்ரோர்ஸ்

யாழ் வீதி,
கிளிநொச்சி.

V.R.M

அரிசி உற்பத்தியில் நீண்டகால அனுபவமிக்கவர்கள்

தரமான அரிசியின் மொத்த
உற்பத்தியாளர்

குத்தரிசி

பச்சை அரிசி

தீட்டல் அரிசி

தரம் I

தரம் II எனப் பெற்றுக் கொள்ளலாம்.

பாலமுருகன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி,
கிளிநொச்சி.